பக்கங்கள்: பன்னிரண்டு + VIII = இருபது
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 14 வியாழக்கிழமை (27-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:184

# இறுதித் தீர்வு பற்றியும் பேச அரசு வலியுறுத்துவதால்தான் இழுபறி

## சொல்ஹெய்மைச் சந்தித்த பின் தமிழ்ச்செல்வன் நேற்றுத் தகவல்



கிளிநொச்சி,மே27

**சமாதானப் பேச்சுக்களில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசும் அதேசமயம், இறுதித் தீர்வு குறித்தும் கலந்துரையாடப்படவேண்டும் என்று அரசுத்தரப்பு வற்புறுத்தி நிற்கிறது. அதனாலேயே அமைதிப்பேச்சு ஆரம்பிக்கப்பட முடியாமல் இழுபறிப் படுகின்றது. நேற்று நோர்வேயின் விசேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசிய பின்னர் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு வெளியிட்ட தகவல்களிலிருந்து இவ்விடயம் தெரியவந்தது.**

எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் நேற்று முற்பகல் விசேட ஹெலிக்கொப்டர் மூலம் கிளிநொச்சி வந்தனர். முற்பகல் 11.15 மணி முதல் 12.30 வரை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, அவர்கள் சந்தித்து உரையாடினர்.

தமது திருமணத்தின் பின்னர் முதற்றடவையாகக் கிளிநொச்சிக்கு வந்திருக்கும் எரிக் சொல்ஹெய்முக்கு தமிழ்ச்செல்வன் திருமண வாழ்த்துத் தெரிவித்தார். அதன் பின்னர் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அச்சந்திப்புக் குறித்து தமிழ்ச்செல்வன் பின்னர் ஊடகவியலாளருக்குத் தெரிவித்ததாவது:-

*கேள்வி:* இன்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் என்ன?

*பதில்:* பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான எமது நிலைப்பாடுகளை விளக்கிக் கூறினோம். ஜனாதிபதியும் அரசுத் தரப்பினரும் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுக்களோடு இறுதித் தீர்வு பற்றியும் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். இந்த (02ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் நேற்று நடந்த சந்திப்பின்போது... (படம்: தீபன்)

## புலிகளின் விமானம்பற்றி தமிழ்ச்செல்வன்...

கிளிநொச்சி,மே27

விடுதலைப் புலிகளிடம் விமானமும் விமான ஓடுதளமும் இருப்பது ஒன்றும் புதிய செய்தி அல்ல.

இப்படித் தெரிவித்தார் விடுதலை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று எரிக்சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளிடம் சிறியரக விமானம் ஒன்று இருப்பதைப் பாதுகாப்புப் படையினர் கண்டு பிடித்துள்ளனர் என்று படைத்தரப்பிலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் செய்தி குறித் (12ஆம் பக்கம் பார்க்க)

## இருதரப்பு இணக்கம் ஏற்பட்டபிறகே பேச்சுக்கான ஏற்பாடுபற்றி முடிவாகும்

### கிளிநொச்சியில் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கிளிநொச்சி,மே27

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பிக்க நிகழ்ச்சி நிரல் தொடர்பாக இணைகப்பாடு ஏற்பட வேண்டும் அது தொடர்பான இணக்கம் ஏற்பட்ட பிறகே பேச்சு ஆரம்பிக்கும் திகதி, இடம் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியும். இப்படிக் கூறினார் நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம்.

கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை முடித்துக் கொண்டு செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நிகழ்ச்சி நிரல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் பேசினேன். பேச்சுக்கள் ஆக்கபூர்வமானதாகவும் முன்னேற்றமானதாகவும் அமைந்தன.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பாக இணக்க நிலை ஏற்படவில்லை. கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதியுடன் பேசி, (12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நிலைமை பற்றி புலிகள் அரசிடம் கடுமையான ஆட்சேபம்

### எரிக் சொல்ஹெய்ம் ஊடாகத் தெரிவிப்பு

கிளிநொச்சி,மே27

கிழக்கில் உருவாகியுள்ள நிலைமை தொடர்பாக அரசிடம் விடுதலைப் புலிகள் தங்கள் கடும் ஆட்சேபத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

நேற்றுக் கிளிநொச்சிக்கு வருகை தந்த நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் ஊடாக அரசுக்கு புலிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இத்தகவலை வெளியிட்டார்.

கிழக்கு நிலைவரம் தொடர்பாக அவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

கிழக்கு நிலைமை தொடர்பான செய்தியை நோர்வே ஊடாக அரசுக்கு இன்று (புதன்கிழமை) அனுப்பியுள்ளோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தொடர்ந்து கொலைகள் நடப்பதும் யுத்தநிறுத்த மீறல்கள் நடந்து கொண்டிருப்பதும் கண்டிக்கக்கூடியது. இவை யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறும் செயல்கள். இவை போன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுமாயின் யுத்த நிறுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதில் நெருக்கடி நிலையேற்படும் என்று செய்தி அனுப்பியுள்ளோம்.

பல்கலைக்கழக பேராசிரியர் தம்பையாவின் கொலை குறித்தும் எங்கள் கண்டனத்தைத் தெரிவித்துள்ளோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த சகல குடும்பங்களுக்கும் மேலும் ஆறு மாதங்களுக்கு நிவாரணம்

### கொள்கை அளவில் ஹரீம் பீரிஸ் இணக்கம்

யாழ்ப்பாணம்,மே27

அதி பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மட்டுமன்றி, இடம்பெயர்ந்த அனைவருக்கும் மேலும் 6 மாதங்களுக்கு உலர் உணவு நிவாரணத்தை வழங்குவதற்கு கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பேச்சாளரும், புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸுடன் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட மனித நேய அமைப்புகளின் பிரதிநிதிகளான சு.பரமநாதன், பி.விக்கினேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் ஆகியோர் -

தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களிலும் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வசிப்பவர்கள், ஆயிரத்து 500 ரூபாவுக்கு குறைந்த மாதவருமானம் பெறுபவர்களுக்கு மட்டுமல்லாது இடம்பெயர்ந்த அனைவருக்கும் உலர் உணவு நிவாரணத்தை வழங்க வேண்டும் என ஜனாதிபதியின் பேச்சாளரிடம் வலியுறுத்தினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி நேற்றுப் பதவியேற்பு

கொழும்பு,மே27

இரண்டு அமைச்சர்களும், பிரதி அமைச்சர் ஒருவரும் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். ஐ.ம.சு.கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, பொதுப் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு மற்றும் பௌத்த சாசன அமைச்சராகவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் பதவியேற்றார்.

அரச தரப்பில் சபாநாயகர் தெரிவுக்கு நிறுத்தப்பட்டு, ஒரு வாக்கினால் அப்பதவியைக் கோட்டை விட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

### தயாராகின்றது ஐ.தே. முன்னணி

கொழும்பு,மே27

அரசின் மூன்று அமைச்சர்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் அமைச்சரும், எதிர்க்கட்சியின் பிரதான கொறடாவுமான மகிந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நாடாளுமன்றத்தில் இன்று, முன்னெப்போதும் இல்லாதவாறு அதன் ஜனநாயகச் செயற்பாடுகளைக் கொண்டு செல்ல முடியாத ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. 107 ஆசனங்களுடன் ஆட்சியில் அமர்ந்திருக்கும் சிறுபான்மை அரசின் சார்பாக நாடாளுமன்றுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள சிலர், நாடாளு (12ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

அத்தகைய நிறுவனங்களை அறிமுகப்படுத்தும் வித்தியாசமான விளம்பரச் சிறப்புமலர் உள்ளே...

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சமாதானப் பேச்சுகளும் அபிவிருத்தியும் சமகாலத்தில் ஒன்றாக முன்னெடுக்கப்படும்!

## யாழ். வந்த ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களும் அபிவிருத்தித் திட்டங்களும் ஒரே சமயத்தில் - ஒன்றோடு ஒன்று சமாந்தரமாக - முன்னெடுக்கப்படும். இது புதிய அரசின் திட்டம் என்கிறார் ஜனாதிபதியின் பேச்சாளரும், புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ்.

குடாநாட்டு நிலைமைகளை நேரில் ஆராய்வதற்காகவும், அரச அதிகாரிகளோடு கலந்துரையாடுவதற்காகவும் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார் ஹரீம் பீரிஸ்.

யாழ் அரச செயலகத்தில் செயலக அதிகாரிகளைச் சந்தித்த பின்னர் அவர் செய்தியாளர் மாநாட்டில் பேசினார்.

குடாநாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள், புதிய அரசின் செயற்பாடுகள், உலர் உணவு நிவாரண நிலைமை என்பன தொடர்பாக அப்போது அவர் விளக்கமளித்தார்.

அவர் கூறியதாவது:-

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் குடாநாட்டில் உருவாகியுள்ள நிலைமைகளை ஆராய்வதற்காகவே இங்கு வந்துள்ளேன். வடக்கு - கிழக்கு மக்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும். இதனால்தான் இது தொடர்பான அமைச்சை ஜனாதிபதி தம்வசம் எடுத்திருக்கின்றார்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எவையும் இப்பகுதிகளில் இடம்பெறவில்லை. இப்போது யாழ். குடாநாட்டுக்கென புதிய அபிவிருத்தித் திட்டங்கள் எவற்றையும் தயாரிக்க வேண்டிய தேவையில்லை. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கம். அதனடிப்படையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள் குடியமர்வு ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதியால் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது தனது நடவடிக்கைகளை மிகவிரைவில் ஆரம்பிக்கும்.

சகல செயற்றிட்டங்களையும் மக்கள் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் ஒன்றிணைந்தே அரசு செயற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மக்களிடையே சகஜ வாழ்க்கையை ஏற்படுத்த முடியும்.

இன்னும் ஓரிருமாதங்களில் செயல் ரீதியான பல முன்னேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இப்பிரதேசங்களிலுள்ள பாலங்களைப் புனரமைத்தல், யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீளக் கட்டிக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

### வெளிநாட்டு அழுத்தம்

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த உலர் உணவு விநியோகமானது சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வெளிநாட்டு உதவிகள் எவையும் கிடைப்பதில்லை. அது மட்டுமல்லாது கடந்த காலங்களில் உலர் உணவு நிவாரணத்தின்போது பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது.

அதேநேரம் தற்போது வழங்கப்படும் நிவாரணத்தின் அளவை அதிகரிக்குமாறு பல தரப்பாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் உடனடியாக அதனை அதிகரிக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக உடனடியாக எத்தகைய தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாதுள்ளது. அரசியல், இராணுவ மற்றும் மனிதாபிமான ரீதியான தீர்மானமாக இவ்விடயம் அமைந்துள்ளதால் இதற்கு மிகவிரைவில் தீர்வுகாணப்படும்.

அது மட்டுமல்லாது உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள சில பகுதிகளில் - மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கபபடும்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களைப் போல வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதே எமது நோக்கமாகும்.

இவ்வாறு ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, ஜனாதிபதியின் ஆலோசகர் எஸ்.சிவானந்தன் மற்றும் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ஐ-5)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,மே27

தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்காக குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று முதல் கழக மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★பிற்பகல் 3 மணி - அம்பாள் வி.க. எதிர் ஆனைக்கோட்டை யூனியன் வி.க.

★ பிற்பகல் 4 மணி- சிவானந்தா வி.க. எதிர் சென்.ஜேம்ஸ்.வி.க.

(எ-5)

## இளைஞனைக் கடத்த முயன்றோர் கைதாகினர்

கொழும்பு,மே27

சிலாபத்தில் இளைஞர் ஒருவரைக் கடத்த முயன்றதாகக் கூறப்படும் சீருடையினர் அடங்கிய குழு ஒன்றை சிலாபம் பொலீஸார் கைதுசெய்திருக்கின்றனர்.

சிலாபம் ஆராச்சிக்கட்டுவ என்னும் பகுதியைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட இளைஞரைப் புத்தளம் பகுதி இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு இராணுவச் சிப்பாய்கள் உட்பட 7 பேர் கொண்ட குழு ஒன்று கடத்த முயன்றுள்ளது. அவ்வேளையில் அங்கு வந்த பொலீஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையால் கடத்தல் சம்பவம் முறியடிகக்கப்பட்டது. கடத்தலுடன் தொடர்புடைய ஏழு நபர்களும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட சிப்பாய் ஒருவருடன் ஏற்பட்ட சொந்தப் பிரச்சினை காரணமாகவே இந்த இளைஞனை கடத்த அவர்கள் முற்பட்டுள்ளனர் என்றும், இது தொடர்பான விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (எ-க)



நேற்று யாழ். குடாநாட்டுக்கு விஜயஞ்செய்த ஜனாதிபதியின் பேச்சாளரும் புனர்வாழ்வு,புனரமைப்பு நல்லிணக்க அமைசசின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுவதையும், அருகில் யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன், யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி சுசில் சந்திரபால, யாழ்.செயலகப பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் என்.சிவபாதசுந்தரம் ஆகியோரையும் கூட்டத்தில் கலந்துகொண்ட அரச அதிகாரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:வசந்தன்)

## இறால் பண்ணைகள் நிறுவப்படும் இடங்கள் இன்று தெரிவாகும்

### பதினொரு இடங்களுக்கு குழு விஜயம்

யாழ்ப்பாணம்,மே27

குடாநாட்டில் இறால் பண்ணை அமைக்கக்கூடிய இடங்கள் குறித்து ஆராய்வதற்கென யாழ்.பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்ற இறால் வளர்ப்புத் தொடர்பான செயலமர்வில கலந்துகொண்ட குழுவினர் இன்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

இறால் வளர்ப்புத் தொடர்பான இரண்டாவது செயலமர்வாகவே இவர்களின் இந்த விஜயம் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று காலை புறப்படும் இவர்கள் மறவன்புலோ, அரியாலை, மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காக்கைதீவு, அராலி, காரைநகர், தொண்டைமானாறு, பருத்தித்துறை, மணற்காடு ஆகிய இடங்களுக்குச் சென்று இறால் பண்ணைக்குரிய இடங்கள் குறித்து நேரில் அறிந்துகொள்வர்.

தெரிவுசெய்யப்படும் முதல் இடங்களில், விரைவில் இறால் பண்ணைகள் நிறுவப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அக்குவா சேவிஸ் நிறுவனம் மற்றும் போரூட் நிறுவனம் ஆகியவற்றின அனுசரணையுடன் யாழ்.பல்கலைக் கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கருத்தரங்கு நேற்று யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் தலைமையில் நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கின் ஆரம்ப உரையினை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நிகழ்த்தினார். போரூட் நிறுவனத் திட்ட முகாமையாளர் அறோஸ்ரென்விக், அக்குவா சேவிஸ் நிறுவனத்தின் தலைவர் ஆனந்த மன்வரு, பேராசிரியர் க.சித்திரவடிவேல் ஆகியோரும் இதில் உரை நிகழ்த்தினர். (எ-6)

## 'புதிய கதைகள்' நூல்வெளியீடு நேற்று சிறப்புற நடைபெற்றது

யாழ்ப்பாணம்,மே27

கப்டன் வானதி வெளியீட்டகத்தினரின் போராளி மலைமகளின் 'புதிய கதைகள்' நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய ஆசிரியை திருமதி பத்மா ஜெயச்சந்திரன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

நிகழ்வில் முன்னதாக பொதுச்சுடரினை கலாநிதி க.சொக்கனும், மாவீரர் லெப்கேணல் மைதிலியின் சகோதரன மதிவாணனும் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றினார்.

நூலின் வெளியீட்டுரையினை வானதி வெளியீட்டகத்தைச் சேர்ந்த திருமதி தமிழவள் நிகழ்த்தினார். யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நூலை வெளியிட்டு வைக்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் முதற பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி சிறப்புப் பிரதிகளை வழங்கினார்.

நிகழ்வின் சிறப்புரையினை தமிழீழக் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

நூலின் ஆய்வுரைகளை எழுத்தாளர் சாந்தன், வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

(எ-fl-86)

## இறுதித் தீர்வு பற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரத்திலுள்ள சிக்கல்களை, நெருக்கடிகளை நோர்வேத் தரப்புக்குத் தெளிவாக விளக்கியுள்ளோம்.

இடைக்கால நிர்வாகசபை பற்றிப பேசி, அதுபற்றித் தீர்வு கண்டு, அதை நடைமுறைப்படுத்திய பின்பே, இறுதித் தீர்வு சம்பந்தமாகப் பேசலாம் என்பது எமது தலைமையின் திட்டவட்டமான நிலைப்பாடு என்று அவர்களுக்கு மீண்டும் வலியுறுத்திக் கூறினோம்.

*கேள்வி:* முன்பு பேச்சுக்கு நீங்கள் முன்வைத்த நான்கு அடிப்படை விடயங்களுக்கும் தாம் இணக்கம் தெரிவிக்கிறார் என நோர்வேத் தரப்பு ஊடாக ஜனாதிபதி உங்களுக்கு அறிவித்திருந்தார். அப்படியிருந்தும் இப்போது பேச்சை ஆரம்பிப்பதில் மீண்டும் நெருக்கடி நிலை ஏற்பட்டதற்கு என்ன காரணம்?

*பதில்:* நான்கு விடயங்களில் மூன்றில் ஓரளவு இணக்கப்பாடு காணப்பட்டாலும் இடைக்கால நிர்வாக சபைப பேச்சுகளோடு, இறுதித் தீர்வுப் பேச்சும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் இணக்கப்பாட்டில் நெருக்கடிநிலையைக் கொண்டுவந்துள்ளது.

இந்த விடயத்தில் எமது தலைமையின் நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்தோம்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படவேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெரும் அவலங்களையும் நெருக்கடிகளையும் சந்தித்து நிற்கின்ற எமது மக்களின் புனர்வாழ்வுப் பணிகள் அதன் மூலம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இதுவே, எமது மக்களின் அபிலாசையும் எதிர்பார்ப்புமாகும். கடந்த தேர்தலில் அதை மக்கள் தமது ஆணையாக வெளியிட்டுள்ளனர்.

அந்த அடிப்படையில்தான் பேசித தீர்வுகாணவேண்டும் என்று வலியுறுத்தினோம்.

இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாக்கப்படாத நிலையில், இறுதித் தீர்வு சம்பந்தமாக நாங்கள் பேசிக் கொண்டிருப்பது, எமது மக்களை நாஙகளே ஏமாற்றுவதாகவும் கால இழுத்தடிப்பைச் செய்வதுமாகவுமே முடியும். எமது இந்த நிலைப்பாட்டை இன்றும் நோர்வேத் தரப்புக்கு தெளிவாக்கியுள்ளோம் இந்த நிலைப்பாடு குறித்து ஜனாதிபதியுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வருவதாக நோர்வேத் தரப்புக் கூறியுள்ளது.

*கேள்வி:* பேச்சுத் தொடர்பான திகதி, இடம் அறிவிப்பது தாமதமாவதற்கு இந்த விடயம்தான் காரணமா?

*பதில்:* இந்த விடயத்தில்தான் இனனமும் இணக்கம் காணப்படவில்லை. தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையைக் கொண்டுவந்து மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கான இந்தக் கட்டமைப்பை நிறுவிக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளோம்.

இறுதித் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் ஒன்றுமே நடக்காது. கால இழுத்தடிப்பைச் செய்வதற்கான தந்திரோபாயமாகத்தான் அது அமையும் என்பது எமக்குத் தெரியும். அத்தகைய நிலமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டை நோர்வேத் தரப்புக்கு வலியுறுத்தினோம். இந்தக் கருத்தை அவர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துச்செல்கின்றனர்.

ஏனைய விடயங்களில் - பேச்சுவார்த்தை நடைமுறை ஒழுங்குகள், இடம் போன்ற விடயங்களில் - ஓரளவு இணக்கப்பாடு ஏற்பட்டது.

இந்த விடயம்தான் பேச்சைத் தொடங்குவதற்கான காலத்தை நிர்ணயிப்பதில் இழுபறியாக இருக்கின்றது.

*கேள்வி:* ஆரம்பத்தில் இருந்தே இந்த இழுபறி இருந்ததா? அல்லது ஜனாதிபதி புதிதாக இந்த விடயத்தை தொடங்கியுள்ளாரா?

*பதில்:* நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சரை மீண்டும் சந்தித்த போது எமது நிலைப்பாட்டை விளக்கமாகக் கூறியிருந்தோம். ஜனாதிபதியிடம் இருந்து இது விடயமாக நல்ல பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்தான் அவர் சென்றார். ஆனால், அது இதுவரை கிடைக்கவில்லை. அதுதான் தாமதத்துக்குக் காரணம் என நினைக்கிறேன்.

*கேள்வி:* அரசிடமிருந்து எழுத்து மூல உத்தரவாதங்களைக் கோரியுள்ளீர்களா?

*பதில்:* இந்தத் தடவை அரசிடமிருந்தும் ஜனாதிபதியிடம் இருந்தும் தெளிவான வரையறைகளை - உத்தரவாதங்களை - பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது.

ஏனெனில், சந்திரிகா அம்மையார் தலைமையிலான இந்த அரசு பல கூட்டுக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைத்திருக்கிறது. அதுவும் சிறுபான்மை அரசாகவே இருக்கிறது.

அந்த அடிப்படையில் அங்கு ஒரு தெளிவான நிலைப்பாட்டை அரசு எடுப்பதும் ஜனாதிபதி தெளிவான உத்தரவாதங்களைத் தருவதும் முக்கியமானது. அந்த வகையில் எமது நிலைப்பாட்டை முன்வைத்தோம். அதை நோர்வேத் தரப்புக்குத் தெளிவாக்கியுள்ளோம். அரசுத் தரப்பிலிருந்தும் அதற்கான இணக்கப்பாடு வருகின்றபோது அந்த உத்தரவாதத்தை நோர்வே அனுசரணையாளர்கள் வெளிப்படுத்துவார்கள். அதன் பின்புதான் நாங்கள் பேச்சுக்களை ஆரம்பிப்பது சாத்தியமாகும்.

*கேள்வி:* வடக்கு - கிழக்கில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளப் போவதாக இந்தியா கூறியுள்ளதே.

*பதில்:* ஊடகங்கள் ஊடாகவே அறிந்தோம். இந்தியாவின் அதிகாரபூர்வ நிலைப்பாடு தெளிவாக எமக்குத் தெரிந்தபின்பே அது பற்றிக் கூற முடியும்.

*கேள்வி:* இந்தியாவில் புதிய அரசு பதவி ஏற்றிருப்பது குறித்து..?

*பதில்:* இந்தியாவில் ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசின் அணுகுமுறை எப்படி இருக்கும் என்பது குறித்து இப்போது எதிர்வு கூறமுடியாது. அரசு மாறியிருக்கிறது. இந்த அரசின் எதிர்காலச் செயற்பாடுகளை வைத்துத்தான் எமது கருத்துக்களைக் கூறமுடியும்..

*கேள்வி:* விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவில் மீண்டும் தடை செய்யப்பட்டுள்ளது. அது குறித்து..?

*பதில்:* விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அரசால் தொடர்ந்தும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமான செயலாகும்.

விடுதலைப் புலிகளை அங்கீகரித்து, தமிழ் மக்களின் போராட்டத்தை அங்கீகரித்து தமிழ் மக்களுக்கு இந்திய தேசத்தின் ஆதரவு இருக்கவேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த தமிழ மக்களின் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்புக்கு மாறாக இந்தத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு துரதிர்ஷ்டவசமானது என்றுதான் கருதுகிறேன் - என்றார். (எ-க-3)

உதயன்

## இந்தியத் தூதரின் அறிவிப்பு

"இலங்கையின் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் (புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும்) புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்திப் பணிகளைச் செய்யவும் அவற்றுக்கு உதவவும் இந்தியா தயாராகவிருக்கின்றது. அழைப்புக் கிடைத்தால் வடக்கு, கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மேற்கொள்வதற்கு புதுடில்லி தயாராக இருக்கின்றது." - இவ்வாறு அறிவித்திருக்கின்றார் இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபம் சென்.

இது இந்தியத் தரப்பின் புதிய நிலைப்பாடு அல்ல என்பது போலவும் - ஏற்கனவே இருந்த விவகாரத்தைத் திரும்ப அவர் கூறுவதுபோலவும் - ஒரு சாதாரண தோரணையில் இந்தக் கருத்தை அவர் முன்வைத்தாலும், இந்தியாவைப் பொறுத்தவரை இந்த மாற்றம் அதனது கொள்கைப் போக்கில் ஒரு முக்கிய நகர்வு (Shift) என்றே அவதானிகளால் கொள்ளப்படுகின்றது.

யுத்தத்தினால் பேரழிவுகளைச் சந்தித்த வடக்கு, கிழக்கு மக்களின் புனர்வாழ்வு குறித்து சர்வதேச சமூகமே சிரத்தை எடுத்து அதிக ஈடுபாடு காட்டியபோது, இந்தியா தள்ளிநின்று வேடிக்கைபார்த்தது. இன்னும் கொஞ்சம் விவரமாகக் கூறப்போனால், அந்தப் பணியில் ஜப்பான் அதீத ஈடுபாடு காட்டியபோது, அதை நெட்டித் தள்ள இந்தியா முயன்றதும், ஜப்பானின் தாராளப் போக்குக்கு எதிராக இராஜதந்திர ரீதியில் எதிர்ப்புக்களைக் காட்டமுயன்றதும் இரகசியமானவை அல்ல.

நாம் இதனைக் கூறுவது சில சமயங்களில் தூதுவர் சென்னின் வார்த்தைகளில் - கருத்தில் - 'எதுவித ஆதாரமுமின்றி எதுவிதக் காரணமுமின்றி - வழமையாகச் சில தமிழ்ப் பத்திரிகைகள் இந்தியாவை அர்த்தமற்ற விதத்தில் விமர்சிக்கும் விவகாரமாகவும், உண்மைத் தன்மை குறைந்த விமர்சனங்களாகவும்' அர்த்தம் கொள்ளப்படலாம். ஆனால், அதுதான் உண்மை என்பது உலகறிந்த விவகாரம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவுவது குறித்து ஆராய்வதற்காக உலகநாடுகள் சமூகம் நோர்வேயிலும் பின்னர் ஜப்பானிலும் ஒன்றுகூடி ஆராய்ந்தபோது அந்த முன்னோடிக்கூட்டத்திலும் பின்னர் மாநாட்டிலும் எத்தகைய பங்குபற்றுதலை இந்தியா வழங்கியது என்பது அப்படியொன்றும் பகிரங்கமாகாத விடயம் அல்ல.

புதுடில்லியில் புதிய அரசு - அதுவும் வித்தியாசமான கொள்கைப் போக்குடைய கூட்டணி அரசு - பதவியேற்ற கையோடு கொழும்பிலும், புதுடில்லி முகவர்களின் சுருதி மாறுகின்றது. அதற்கான காரணங்கள், பின்னணி என்பன என்னவாக இருந்தாலும், அந்த மாற்றத்தைத் தமிழர்கள் - குறிப்பாக, யுத்தவன்முறைகளால் பாதிக்கப்பட்டு அதன் வடுக்களைச் சுமந்துநிற்கும் ஈழத்தமிழர்கள் - மனமகிழ்வோடும், மனநிறைவோடும் வரவேற்கின்றார்கள் என்பதே உண்மை.

இலங்கை விவகாரத்தில் இந்தியா எவ்வாறான ஆக்கபூர்வ பங்களிப்பை வழங்கமுடியும் என்பதை இப்போது இந்தியாவின் புதிய கூட்டணி அரசில் முக்கிய இடத்தைத் தக்கவைத்திருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ தெளிவுபடுத்தியிருந்தார்.

"தூரத்தில் நின்று பார்வையாளராகச் செயற்பட்ட முன்னைய அரசின்போக்குத் தப்பானது. நாம் எவ்வளவு வற்புறுத்தியும்கூட முன்னர் இருந்த அரசு சம்பந்தமில்லாமல் இருந்தது. அப்படி இருக்கக்கூடாது. இலங்கை விடயத்தில் ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் போன்றவை ஆக்கபூர்வமான முறையில் அக்கறை எடுத்துக்கொண்டு செயற்படுகின்றன. அதுபோல இந்தியாவும் அக்கறை எடுத்துக்கொண்டு இலங்கையின் சமாதான விடயங்களில் உதவ வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். பட்டுக்கொள்ளாது தொலைவில் நின்று இந்தியா பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது; பார்த்துக்கொண்டு இருக்கவும்முடியாது."

"இந்தியா தன்னுடைய பூகோள, அரசியல் நலன்களைக் கருத்தில் கொண்டால் கூட - ஈழத்தமிழர் பிரச்சினையில் ஆக்கபூர்வமான முறையில் பங்களிப்புச்செய்ய முடியும்" என்று வைகோ சுட்டிக்காட்டியிருந்தார்.

வைகோ போன்றோரின் உபதேசம், அதில் உள்ள உண்மை, யதார்த்தம் போன்றவை இந்திய அதிகார வர்கத்தின் காதுகளில் சற்று ஏறத் தொடங்கியிருப்பதையே இந்தக் கொள்கைப்போக்கு வெளிப்படுத்துகிறது.

அமெரிக்காவும் கூட புலிகள் இயக்கத்தைத் தடைசெய்திருக்கின்றது. ஆனால், அதற்காகப் புலிகளின் தூதுக்குழு கலந்துகொண்ட - உதவிவழங்கும் நாடுகளின் நோர்வே முன்னோடிக் கூட்டத்தை அமெரிக்கா பகிஷ்கரிககவில்லை. பதிலாக, அதன் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் அதில் கலந்துகொண்டார்.

பிரிட்டனும் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்துள்ளது. ஆனால், பிரிட்டனின் கொழும்புத் தூதரக அதிகாரிகள் வன்னியில் புனரமைப்பு மற்றும் பணிகள் தொடர்பாக புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்காமல் - தீண்டத்தகாதவர்கள் என்று கருதி - புறக்கணிக்கவில்லை.

எனவே, இனிமேலும் ஒளித்துப்பிடித்து விளையாடாமல், ஈழத்தமிழர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது மற்றும் சமாதானம் தேடும் நடவடிக்கைகளில் தனக்கு உரிய பங்களிப்பை - எல்லைமீறாமல் வழங்க இந்தியா முன்வரவேண்டும். அந்தத் திசையை நோக்கிய முன்நகர்வின் ஒரு கட்டமாகவே தூதுவர் சென்னின் தற்போதைய அறிவிப்பை ஈழத்தமிழர்களும் அவர்களின் ஏகத் தலைவர்களும் கருதுகின்றார்கள்.

# வலிகாமம் வடக்கு மக்களின் துயரை நீங்களாவது தீர்த்துவையுங்கள்

## ஹரீம் பீரிஸிடம் பொது அமைப்புக்களின் ஒன்றியம் மகஜர்

யாழ்ப்பாணம்,மே27

கடந்த சிலவருடங்களாக இங்கு விஜயம்செய்த பாதுகாப்பு, உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் அனைவரிடமும் வலிகாமம் வடக்கில் மீள்குடியேறக் காத்திருக்கும் மக்களின் துயரங்கள்பற்றி எடுத்துகூறியாகிவிட்டது. பல்வேறு கட்டங்களில் பேச்சுகளும் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தநிலையில், இப்பகுதிக்கு விஜயம்செய்யும் நீங்களாவது இந்தமக்களின் இடர்துடைக்க அவசியமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்று இந்த மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு தெரிவிக்கும் மகஜர் ஒன்றை வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த வடக்கு நிவாரண புனரமைப்பு தேசிய நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸிடம் கையளித்துள்ளது.

வலிகாமம் வடக்கில் மீளக்குடியேறுவதற்காகக் காத்திருக்கும் மக்களின் துயரங்களை அம்மகஜரில் விரிவாக எடுத்து விளக்கியுள்ள மேற்படி ஒன்றியம் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஏ-9 பாதை திறக்கப்பட்டதையடுத்து வன்னியிலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் தங்கள் சொந்த இடங்களில் குடியேறுவதற்காகப் பெருந்தொகையான மக்கள் வடக்கிற்கு வந்துள்ளார்கள். இதனால், நிலைமை மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளது.

அவர்கள் நலன்புரி முகாம்களில் மிக மோசமான - சுகாதாரக்கேடான - சூழ்நிலைகளில் வாழ்க்கையை ஓட்டவேண்டி இருக்கிறது. பலர் தமக்குச் சாத்தியமில்லாத அளவு வாடகைகளை வழங்கிக்கொண்டு தனியார் வீடுகளில் வசிக் கிறார்கள்.

இப்பகுதிகளில் 60வீதமான மக்கள் விவசாயிகள். தமது சொந்தநிலங்களில் விவசாயம்செய்து தன்னிறைவுடன் வாழ்ந்தவர்கள். இப்பொழுது நிலமும் இல்லை. உலர் உணவை நம்பி வாழவேண்டியுள்ளது.

அதேபோல், 30 வீதமானவர்கள் மீனவர்கள். இப்பகுதியின் 30 வீத மீன்தேவையை இவர்களே பூர்த்திசெய்துவந்தனர். இப்பொழுது அந்த வருமானம் அவர்களுக்கு இல்லாமல்போய்விட்டது.

புராதன வரலாற்றுப் புகழ்மிக்க அவர்களின் ஆலயங்களுக்குச் செல்லமுடியாதநிலையில் தமது வழிபாட்டு இடங்களும் மறுக்கப்பட்டநிலையில் இருக்கிறார்கள்.

- இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களின் பல்வேறு பிரச்சினைகளும் அம்மகஜரில் விளக்கப்பட்டுள்ளன. (ப)

## இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஆங்கிலப் பாட வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மே27

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் மூன்று இடங்களில் ஆங்கிலப் பாடநெறி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் நிதியுதவியின் கீழ் இந்த ஆறுமாதகாலப் பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது. சாவகச்சேரி, உடுவில் சங்கானை ஆகிய மூன்று இடங்களிலிருந்து சுமார் 50 இளைஞர், யுவதிகள் இப்பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள இளைஞர் கழகத்துடனோ தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட அதிகாரியுடனோ தொடர்புகொண்டு விண்ணப்பிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-7)

## வடக்கு ~ கிழக்கு ஆஸ்பத்திரிகள் குறித்து நோர்வேக்குழு ஆராய்வு

யாழ்ப்பாணம்,மே27

வடக்கு - கிழக்கு மருத்துவமனைகளின் அபிவிருத்தி குறித்து நோர்வே அரசின் குழு ஒன்று ஆராய்ந்துவருகிறது.

நேற்றுமுன்தினம் யாழ். போதனாவைத்தியசாலையை அந்தக் குழுவினர் நேரில் பார்வையிட்டனர். அப்போது அவர்கள் வைத்தியசாலையின் நிறைகுறைகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

அத்துடன், அவர்கள் யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகத்துடன் கலந்துரையாடினர்.

யாழ். வைத்தியசாலையின் பணிநிலை குறித்து நோர்வேக் குழுவினர் கருத்துவெளியிடுகையில் -

இவ்வைத்தியசாலைக்கு நோர்வே மட்டுமன்றி மற்றைய நாடுகளும், பொது அமைப்புகளும் உதவிகள் செய்வதற்குக் காத்திருக்கின்றன. அவற்றை உடனடியாக மேற்கொள்ளாதமைக்குப் பல காரணங்கள் உள்ளன.

அதில் முக்கியகாரணம் இலங்கை இனப்பிரச்சினையாகும். தற்போது தோன்றியுள்ள அமைதிநிலை காரணமாகவே நாம் இங்குவந்து நேரடியாக இங்குள்ள நிலைகுறித்து ஆராயமுடிகிறது.

முற்றான தீர்வு காணாதவிடத்தில் இப்பணிகளை மேற்கொள்வது உபயோகமற்றதாகவே போய்விடும். எனவே, தீர்வு ஒன்றுகிட்டுவதே உதவிகள்கிடைக்க வழிவகுக்கும் - என்று அவர்கள் கூறினர். (ஒ-6-15)

## 5 பிரதேச செயலர் பிரிவுகளில் வலுவிழந்தோருக்குப் புனர்வாழ்வு

வலி.தென்மேற்கு,மே27

வலுவிழந்தோருக்கான சமுதாயமட்ட புனர்வாழ்வுத் திட்டம் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

இதற்கெனப் பயிற்சியளிக்கப்பட்ட தொண்டர்கள் மூலம் இனங்காணப்பட்ட வலுவிழந்தோருக்குப் புனர்வாழ்வு வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய வலய மட்டத்திற்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளினதும் சமூகசேவை அலுவலர்கள், பயிற்சிபெற்ற தொண்டர்கள், அகதிகளுக்கான ஐ.நா.தூதரக யாழ். வதிவிடபிரதிநிதி, யாழ். அரச செயலகத்திலுள்ள அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் திட்ட இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஒ-135)

### நாளை

வைகாசி 15
வெள்ளிக்கிழமை
(28.05.2004)
திதி : நவமி
இரவு 08.46 வரை.
அக்கினி நாள் முடிவு
நட்சத்திரம் : பூரம்
பகல் 11.45
சுபநேரம்: 05.52 - 07.22
ராகுகாலம்: 10.22 - 11.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அநியாயத்தைத் தட்டிக் கேட்கமுடியாதவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள்தான்.

### பல்கலை ஊழியர்களுக்கு

## இடைக்காலக் கொடுப்பனவு வழங்க திறைசேரி அனுமதி

கொழும்பு,மே27

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களுக்கான இடைக்காலக் கொடுப்பனவை வழங்குவதற்கு திறைசேரி நேற்றுமுன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 150 ரூபாவீதம் இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது. பின்னர் கடந்த சிலவருடங்களாக அந்தக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தது.

அதனையடுத்து பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் மேற்படி இடைக்காலக் கொடுப்பனவை வழங்குமாறும் சம்பள முரண்பாடுகளை நீக்குமாறும் கோரிப் பல்வேறு வகையான போராட்டங்களை முன்னெடுத்துவந்தனர்.

இதுதொடர்பாக அண்மையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதிகாரிகளும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் தொழிற்சங்க முன்னணியும் கல்வி அமைச்சருடன் மேற்கொண்ட பேச்சுக்களையடுத்து மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்கு ஆவனசெய்யுமாறு திறைசேரியிடம் கல்வி அமைச்சுக் கோரிக்கை விடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்தே இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான அங்கீகாரத்தை திறைசேரி நேற்றுமுன்தினம் வழங்கியது.

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் கணிசமான சம்பள உயர்வுகோரி தொடர்ச்சியாக நடத்திவந்த போராட்டங்களையடுத்து கடந்தவருடம் ஓகஸ்ட் மாதத்தில் முன்னைய மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் பயிற்சிகள் தொடர்பான அமைச்சரால் இந்த இடைக்காலப்படி வழங்கப்பட்டது. (ப-ஒ-4)

## கைப்பணிக் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் துரிதகதியில்

யாழ்ப்பாணம்,மே27

கிளிநொச்சியில் இடம்பெற உள்ள கைப்பணிப்பொருள் கண்காட்சிக்குக் காட்சிப்பொருள்களைச் சேகரிக்கும்பணி தற்போது மேற்கொள்ளப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண கைப்பணிப் பொருள்களின் உற்பத்தியை மேம்படுத்துமுகமாக மாபெரும் கைப்பணிப் பொருள் கண்காட்சி ஒன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சிக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களப் பணிப்பாளர் ஆர்.விஸ்வலிங்கம் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இக்கண்காட்சியில் கைத்தறித்துணிகள் மற்றும் கைப்பணிப் பொருள்களைக் காட்சிப்படுத்த விரும்புபவர்கள் அடுத்தமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகங்கள் ஊடாக மாகாணத் தொழிற்றுறைத்திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கலாம். (ஒ-7)

## தபாலட்டையின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள்

கொழும்பு,மே27

தபாலட்டையின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 'சலன சித்திரம்' அமைப்பினர் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

இந்த அமைப்பினர் விலைகுறைப்புச் சம்பந்தமாக அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தபாலட்டையின் விலையை மூன்று ரூபாவிலிருந்து ஒரு ரூபாவாகக் குறைத்து, அதன் விலை மாறாதிருக்கும் வண்ணம் மானியம் வழங்கவேண்டும்.

சமூக மேம்பாட்டுக்காகப் பாடுபடும் நற்பணி மன்றங்கள் தமது சமூகப் பணிகளைச் சிக்கனமாகவும் சிறப்பாகவும் முன்னெடுக்கத் தபாலட்டை விலைகுறைப்புப் பேருதவியாக அமையும்.

தபாலட்டையைத் தமது தகவல் பரிமாற்றச் சாதனமாகப் பயன்படுத்தும் வறியமக்களும் இதனால் பெரிதும் நன்மையடைவார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-ரி)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் விசேட ஆணையாளரும், ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாசாலை பழைய மாணவர் சங்கத் தலைவரும், ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டப ஆலோசனைச் சபைத் தலைவரும், ஆவரங்கால் சிவன் கோயில் திருப்பணிச் சபை உறுப்பினரும், பச்சிலைப்பள்ளி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உபதலைவருமாகிய

உயர்திரு.


**இளையதம்பி துரைசிங்கம் சிவராசா**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 23.01.2004 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிபதி திருமதி S. நந்தசேகரன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், பச்சிலைப்பள்ளிவாழ் மக்களுக்கு அவரின் சேவைகள் மேன்மேலும் தொடர, அவரும் அவர்தம் குடும்பத்தினரும் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(32303)
(34-19-17-24)

# மனமார வாழ்த்துகின்றோம்



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய எமது நிலைய மூத்த உறுப்பினரும் சமூக சேவையாளருமாகிய பண்டத்தரிப்பைச் சேர்ந்த

திரு.

**அல்வின் எட்வின் பீரிஸ்**

(சுகாதார முகாமைத்துவ உதவியாளர் (H.M.A))

அவர்கள் 24.05.2004 அன்று நீதிபதி இ.த.விக்னராஜா அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டமையையிட்டு அவரை நாம் எம் நிலையத்தின் சார்பில் மனமார வாழ்த்துகிறோம்.

சென். மேரிஸ் சனசமூக நிலையம்,
பண்டத்தரிப்பு.

(32362)(42-19-17-24)

# 26ஆவது பிறந்தநாளில் நீங்காத நினைவுடன்



**வீரவேங்கை மன்னன்**

**லோகநாதன் கோகுலன் / கவாஸ்கர்**

(பரியோவான் கல்லூரியின் முன்னாள் உயர்தர வகுப்பு மாணவன்)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 27.05.1978 | 14.07.1995 |

உற்றாரும் சுற்றாரும்
பலவாறும் ஏங்கிட
தங்கமதி வான்விட்டு
தாய்மடியைச் சேர்ந்ததுபோல்
இந்தப் பொன்னான தருணமதில்
தாரணியிலே வந்துதித்தீர்!
வந்துதித்த நாள்முதலாய்
எம்மை அன்பின்பால் ஆட்கொண்டீர்!
பயங்கரங்கள் ஆட்கொண்ட – நமதன்னை
பூமியினைக் கறையின்றிக் கைப்பற்ற
துணிவோடு சென்றுமது உயிர் துறந்தீர்! – எனினும்
உயிர் துறந்த உம் நினைவைத் துறக்காமல்
நாம் இங்கு நீர் பிறந்த நாளிதிலே – உமக்கு
நல்வாழ்த்தை நல்குகிறோம் – உம்
ஏழ் பிறப்பும் நலம் பெற!

உன் நினைவுடன்:
அன்பு அப்பா, அம்மா,
அக்காமார், அத்தான்மார்,
மருமக்கள்.

58/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(32351) (24-19-17)

## வீதி விபத்தில் குடும்பப்பெண் படுகாயம்!

கரவெட்டி,மே27

வான் மோதியதில் குடும்பப்பெண் வலதுகாலில் படுகாயமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 3.15மணியளவில் வியாபாரிமூலை பிரதான வீதியால் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இருபிள்ளைகளின் தாயான அல்வாய் வடக்கைச் சேர்ந்த கிருஷ்ணானந்தபவன் சூரியகலா (வயது 34) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

விபத்தை ஏற்படுத்திய வான் பருத்தித்துறைப் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது. (ஒ-70)

## மூலிகை மருத்துவம் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே27

சுதேசிய மருத்துவத்துறை அமைச்சின் ஆதரவில் மூலிகை மருத்துவம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரிக் கலையரங்கில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் ஆர்.ஒ.பி.விஜயசேகர கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளார். (10-ரி)

## கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,மே27

தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அடுத்தமாதம் 4ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாகாணக் கல்விச் செயலாளர், மாகாண உதவிக் கல்விச் செயலாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதால், சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (10-ரி)

★ ★ ★

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளி முதன்மை ஆசிரியர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு நடைபெறவுள்ளது.

அனைத்து முதன்மை ஆசிரியர்களையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா கேட்டுள்ளார்.(10-ரி)

## தமிழ் இணையப் பல்கலைக்கழகப் பரிசளிப்பு விழா

கொழும்பு,மே27

தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 30ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு தனா கூட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர்.தனராஜா தலைமையில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் இணைய வழிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன், பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டோருக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ.சந்திரசேகரன், மகரகம தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வி ஆலோசக நிபுணரும் பணிப்பாளருமான ரி.தனராஜா, சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் தமிழ் மொழிப்பாட இணைப்பாளருமான கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

## மணல் லொறி பொலீஸாரிடம் சிக்கியது

தென்மராட்சி,மே27

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த லொறியினைப் பொலீஸார் வழிமறித்தபோது சாரதி லொறியைக் கைவிட்டுத் தப்பியோடிய சம்பவம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி கனகம்புளியடிச் சந்தியில் இடம்பெற்றது. பொலீஸார் லொறியினைச் சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்று தடுத்துவைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# மனமுவந்து மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி கிளை முகாமையாளராக இருந்து தனது சேவையைத் திறம்பட ஆற்றியவரான

உயர்திரு. **துரைசிங்கம் ரகு**

அவர்கள் உதவிப் பிராந்திய முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளமையையிட்டு வங்கி வாடிக்கையாளர்கள் அனைவரும் அவரைப் பாராட்டி தமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

அவர் மேன்மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று சேவையில் சிறப்புற்றுத் திகழவேண்டும் என்று மனமுவந்து மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

வங்கி வாடிக்கையாளர்களான
கா.கணேசன், க.ஜெயச்சந்திரன், ச.சந்திரசேகரம்,
கை.சிறிவரதன், கா.குமரன், க.ரமணன்.

யாழ்ப்பாணம்.

(32345)(34-19-17-24)

# வெள்ளிவிழா வாழ்த்து



இன்று (27.05.2004) வியாழக்கிழமை தமது இருபத்தைந்தாவது ஆண்டு திருமண நிறைவுநாளைக் கொண்டாடும்

**திரு.திருமதி அன்ரன் – மல்லிகா**

தம்பதிகளை இன்றுபோல் என்றும் வாழ வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துவோர்:
ஸ்ரீபன் மேரிறோஸ், ஜெயரட்ணம் அன்னம்மா,
அழகேந்திரன் அன்னமரியை,
பிறின்ஸ் ஜெயராணி, தாசன், சாந்தி ஆகியோரின்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

17/8. பீச்றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.

(32352)(34-19-17-24)

# சட்ட உரிமை பின்வாங்கல்

(To Withdraw the Power of attorney)

இல. 290,கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும்

**திருமதி சறோஜினி குலசிங்கம்** ஆகிய நான்

**திருமதி தேவகி தனராசா,**

55, நெடுங்குளம் வீதி, அரியாலை என்ற முகவரியில் வசிப்பவருக்கு 6ஆம் திகதி நவம்பர் 2002ஆம் ஆண்டு இல.3040 / 30.9.2002 கொடுக்கப்பட்ட சட்ட உரிமையை பின்வாங்குகின்றேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

காலஞ்சென்ற சட்டத்தரணி R.ஜெயசிங்கம், 38, சென்ற் ஆன்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்பவரின் முன்னிலையில் இது நிறைவேற்றப்பட்டது.

ச.குலசிங்கம்.

(32356)(42-19-17-24)

# நீங்காத நினைவில் 31ஆம் நாள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04 | 27 |
| – | – |
| 09 | 04 |
| – | – |
| 1959 | 2004 |

# அமரர் வடிவேலு அரியரட்ணம்

**ஆறாது உங்கள் நினைவு**

நெஞ்சமெல்லாம் நிறைந்து விட்ட இதயதெய்வமே!
வஞ்சனை இல்லா வாழ்வளித்த மானிட விழுமியமே!
சொல்லுக்குள் சொல்லை சுருக்கி வைத்த சோதிமயமே!
சொல்லொணாச் சுடர்ஒளியே - அப்பாவே!

ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தும் - "அப்பா"
என்றழைக்க "அப்பா" இல்லையே!
விழி கசிந்து நாமிருக்க விண்நோக்கிப் போனதேன்?
பதை பதைத்து நாம் கதற பார்க்காமல் போனதேன்?

உங்கள் ஆறாத துயரினைச் சுமந்து நின்று
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அ.புஸ்பவேணி (மனைவி)
பிள்ளைகள்: சரணிகா,
சங்கீதா,
அனுஷிகா.

வண்ணாங்கேணி,
பளை.

(32353)(42-19-17-24)

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி இந்தியப் பிரதமருக்கு பொது அமைப்புகள் மகஜர்

யாழ்ப்பாணம்,மே27

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு பொது அமைப்புகள் பலவும் இந்தியப் பிரதமருக்கு மகஜர்களை அனுப்பி வருகின்றன.

இந்த வகையில் யாழ்.மாவட்டப் பொதுஅமைப்புகளின் ஒன்றியம், இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகம், யாழ்மாவட்டக் கூட்டுறவுச் சபை ஆகியனவும் இந்தியப் பிரதமருக்கு மகஜர்களை அனுப்பி உள்ளன.

### பொது அமைப்புகளின் ஒன்றியம்

யாழ்.மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் அனுப்பிய மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள விடுதலைப் புலிகள் தான் என்பதை அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல் மூலமாக ஜனநாயக ரீதியில் ஆணித்தரமாக மீண்டுமொரு தடவை நிருபிக்கப்பட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களின் இனநெருக்கடிக்கு தீர்வு காணக்கூடிய உகந்த சூழ்நிலை சர்வதேச அரங்கில் உருவாகிவரும் வேளையில் விடுதலைப் புலிகள் அமைப்பை மேலும் இரண்டு வருட காலத்திற்கு இந்தியா தடை செய்தமை எமக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் நலனுக்கோ அல்லது இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கோ தமிழீழ விடுதலைப் போராட்டமோ அல்லது விடுதலைப் புலிகள் அமைப்போ குந்தகமாக இருக்கமாட்டா. தமிழ்மகளின் விடுதலையை வென்றெடுப்பதே தமது இலட்சியம் என்பதை பல தடவைகள் விடுதலைப் புலிகள் தெளிவு படுத்தியுள்ளனர்.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கடந்த இரண்டரை ஆண்டுகளாக யுத்தநிறுத்தம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. புதிதாகப் பதவியேற்ற அரசும், புலிகளுடன் பேச்சைத் தொடர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்ற முக்கியத்துவம் வாய்ந்த இன்றைய சூழலில இந்திய அரசு புலிகளை தடைசெய்திருப்பது சமாதானச் சூழலை பாதிக்கக்கூடியது. இது இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண தடையாக அமைந்துவிடும். இது ஈழத்தமிழ் மக்கள் தங்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு பாதகமாக அமைந்து விடும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஈழவிடுதலைப் போராட்டத்தில் அளப்பரிய தியாகங்களை புரிந்து இன்று விடிவினை எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில் இந்தியா இதற்கு பூரண ஆதரவு வழங்கி சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதே பொருத்தமானதாக அமையும். எனவே ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மீள் பரிசீலனை செய்து அத்தடையினை நீக்க வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தங்களை கேட்டுக்கொள்கின்றது என்றுள்ளது.

### கூட்டுறவுச் சபை

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரில் கூறியுள்ளதாவது:-

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாய் ஈழத்தமிழ்மக்களின் சுதந்திரமான தடைகளற்ற இயல்பு வாழ்க்கை நிலையை தமது இலட்சியமாகக் கொண்டு கடந்த இரண்டு வருடங்களிற்கு மேல் போர்நிறுத்தத்தை கடைப்பிடித்து சர்வதேசத்தையே ஒரு கணம திரும்பிப் பார்க்க வைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீடிப்பை இந்திய அரசு மேற்கொள்வதை நாம் எதிர்ப்பதோடு விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை விரைவில் நீக்கி சர்வதேசத்தில் விடுதலைப் புலிகள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட இயக்கமாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்பதை தெளிவாக வலியுறுத்துகின்றோம்.

அண்மையில் நடந்து முடிந்த இலங்கையின் நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின அமோக வெற்றியும் விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று சர்வதேச அரங்கிலே எடுத்து விளக்குகின்றது. தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் ஈழத் தமிழர் ஆதரவுக் கூட்டணியின் வெற்றியும் இலங்கையைப் பொறுத்தவ்ரையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வெற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை இரண்டு ஆண்டுகள் நீடித்தமையினை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது.

### தொழில்நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியம்


இலங்கைத் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் மாணவர் ஒன்றியம் தனது மகஜரில் வலியுறுத்தியுள்ளதாவது:-

சிங்களத் தலைமைகளால் தமிழ் மக்கள் பல வழிகளிலும் அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப் பட்டபோது அதற்கு எதிராக எழுந்த ஆயுதப் போராட்டமானது இன்று அழிக்கப்பட முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளது. இந்நிலையில் இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேசி தமிழ்மக்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாடு சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ளது.

தமிழர் போராட்டமானது தீவிரமடைந்த காலப்பகுதியில் இந்தியாவுடன் சில கசப்பான உணர்வுகள் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால், இன்று அந்த நிலை மாறி விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் இந்தியாவை ஒரு நேச சக்தியாகக் கருதிச் செயற்படுகின்ற வேளையில் இந்தியாவின் இந்தத் தடைநீடிப்பானது தமிழ்மக்களைப் பொறுத்தவரை மிகுந்த வேதனையளிக்கும் விடயமாகும்.

இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தியாவில் அரசியல் மாற்றம் ஏற்பட்டபோது தமிழ்மக்களாகிய நாங்கள் அந்த அரசியல் மாற்றமானது தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுத்தரும் என்று மகிழ்வடைந்தோம். ஆனால், நாங்கள் கருதியதற்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையானது மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டின் மூலம் தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்கு இந்திய அரசு குந்தகம் விளைவித்துள்ளது. எனவே, இந்திய அரசு இந்த முடிவினை மீள் பரிசீலனை செய்து விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்கி தமிழ்மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று தமிழ்மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.



*வலி.வடக்கு, பிரதேச சபையின் முன்னாள் செயலரும், தற்போது நல்லூர் பிரதேச சபையின் செயலராக இடமாற்றம் பெற்றுச் சென்றவருமாகிய பொ.வைரமுத்துவை கௌரவித்து வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர்கள் நடத்திய பிரிவுபசார விழாவில் வலி.வடக்கு பிரதேச சபையின் இப்போதைய செயலாளர் செ.செல்வரத்தினம் முன்னாள் செயலருக்கு அன்பளிப்புப் பொதியை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# பல்கலை.கற்கை வெற்றிடங்களுக்கு தெரிவான மாணவர்களின் விவரம்

யாழ்ப்பாணம்,மே27

யாழ்.பல்கலைக்கழகத்தில் விவசாயம், உயிரியல், விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் ஆகியகற்கை நெறிகளில் உள்ள மாணவர் வெற்றிடங்களை நிரப்பத் தெரிவுசெய்யப் பட்டவர்களின் பட்டியல்வெளியிடப் பட்டுள்ளது. அந்த விவரம் வருமாறு

### விவசாயம்

ஈ.பிரஜீவா, வை.கனாதரன், என்.சிவலோகநாதன், எஸ்.சத்தியரூபன், ஆர். விமலச்சந்திரன், கே.மகாலிங்கம், எஸ்.சசிரேகா, செல்வி ஆர். வசந்தரூபன், செல்வி ஆர்.சிவபாதம், செல்வி என்.பேரின்பநாயகம், ஏ.பூஜினி, செல்வி எஸ்.பரம்சோதி, செல்வி ஏசண்முகதாஸ், செல்வி ஏ.சிவ லிங்கம், செல்வி எஸ்.சாம்பசிவம், செல்வி ஜே.சுடாச்சரம், ரி.ஓசன், என் வசந்தரூபி, எஸ்.தர்மிலா, பி.சத்தியகுமாரி, ஏ.ஜேசுதாஸ், பி.தர்மீசன், எஸ். கிருஷாந்தன்,

### பௌதிக விஞ்ஞானம்

எஸ்.கஜேந்திரன், எஸ்.சத்தியன், ஜி.செந்தூரன், ஜே.கஜன், யு.இராகுலன், வி.அகிலன், ஜே.மகேஸ்வரன், எஸ்.சிவசுதன், எஸ்.சண்முகநாதன், வி.ஆர்.சுகிதன், ஆர்.டொமினிக், எஸ. ஆரூரன், எஸ்.முரளிதரன், எஸ்.தியாகராஜா, எஸ்.கலாமோகன், எஸ்.குருபரன், எஸ்.தருமராசா, எஸ்.அமலராஜன, எஸ்.ஏகாம்பரம், கே.பார்த்தீபன், ரி.பி.சுகிந்தன், டி.சி.ஹேமன்ராஜ்.

### உயிரியல் விஞ்ஞானம்

செல்வி எஸ்.பொன்னம்பலம், கே.தமிழினி, செல்வி எம்.பி.தங்கவடிவேல், என்.அசுமத், செல்வி கே.அருணாசலம், வி.கோகுலன், செல்வி கே. ஜகதீஸ்வரன், செல்வி என்.நடராஜா, ரி.கோகுலன், செல்வி எஸ்.குணசிங்கம், செல்வி கே.துரைசிங்கம், செல்வி ரி.சுப்பிரமணியம், செல்வி வை.வெள்ளியம்பலம், எஸ்.சசிகலா, செல்வி ஈ. சிவசுப்பிரமணியம், எஸ்.ரேகன், எம். ரஜீவன், ஏ.ஏ.நவின், செல்வி எஸ்.சின்னத்துரை, கே.கிருபாலினி, செல்வி ஏ.பரமேஸ்வரன், செல்வி ரி.நாகராஜா, வி.றேணுகா, வி.சிவதர்சினி, யு.அஜிதா, பி.கார்த்திகேயன், செல்வி எச்.சுந்தரலிங்கம், எஸ்.வசீகரன், கே.ஜோதிப்பிரகாஷ் எஸ்சுபாஷ்கரன், ஆர்.அஜந்தா தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு அறிவித்தல் கடிதம் அனுப்பப் பட்டுள்ளதாகவும் -

அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் அவர்கள் தமது பதிவை மேற்கொள்ள வேண்டும் என்றும்-

மேலதிக விவரங்களை யாழ்.பல்கலைக்கழகப் பரீட்சைப் பிரிவில் பெற்றக்கொள்ளலாம் என்றும் - பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

# தென்மராட்சிப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 'யுனிசெவ்' நிதி

தென்மராட்சி,மே27

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகளுக்கு இவ்வருடம் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை "யுனிசெவ்" நிறுவனம் ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளது.

இதற்கென 27 லட்சத்து 20 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளில் தண்ணீர்த் தொட்டிகள், மலசல கூடங்கள் போன்றவற்றை அமைக்க இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி , நாவற்குழி அ.த.க. பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அ.மி. த.க. பாடசாலை, மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை, நுணாவில் கிழக்கு அமிர்த்தாம்பிகை வித்தயாலயம், சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், 'கொடிகாமம் அ.த.க. பாடசாலை, கச்சாய் அ.த.க.பாடசாலை, மிருசுவில் வடக்கு அ.த.க.ாடசாலை, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இவ் அபிவிருத்தித் திட்டவேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது . (ஒ-117)

# நன்றி தெரிவிக்கிறார் தாயகம் திரும்பும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர்

கொழும்பு,மே27

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளராகப் பதவி வகித்துவந்த அக்னஸ் பிரேகடொட்டிர் அம்மையார் தம் பதவிக் காலம் முடிந்து நாடு திரும்புவதையொட்டி விடுத்துள்ள ஒரு செய்திக் குறிப்பில் தமது கடமைகளின்போது ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

13 மாதங்கள் இங்கு கண்காணிப்புக்குழுவின் பேச்சாளராக இருந்துள்ள பிரேகடொட்டிர் ஐஸ்லாந்தைச் சேர்ந்தவர். அங்கு வெளிவரும் ஒரு பத்திரிகையின் செய்தியாசிரியராக இருந்தவர். நாடு திரும்பியதன் பின்னர் மீண்டும் அதே பதவியில் அவர் அமரப்போகிறார்.

இவருக்குப்பின் அப்பதவியில் அமரப்போகும் டிஸாபின் போகா அம்மையாரும் ஐஸ்லாந்தைச் சேர்ந்தவர்தான். அங்குள்ள அரச வானொலி நிலையத்தின் செய்திப் பிரிவில் 19 ஆண்டுகள் செய்தி நிருபராகப் பணி புரிந்தவர்.

பிரேகரொட்டிர் அம்மையாரின் சேவைக்காலம் இம்மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. (ப)

## பாடசாலைக்கு 25 ஆயிரம் ரூபா

தெல்லிப்பழை,மே27

புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனும் தறபோது வெளிநாட்டில் வசித்து வருபவருமான தி.பஞ்சாட்சரதேவன் என்பவர், மேற்படி பாடசாலைக்கான பெயர் வளைவினை அமைக்க 25 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

(-10-150)

# நீதிமன்றச் செய்திகள்

யாழ்ப்பாணம்,மே27

சட்டவிரோதமாக மணல் கடத்திச் சென்ற மூவருக்கு யாழ். நீதிமன்றம் 32 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளது.

இதில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றியமைக்காக பாரதி வீதி நாயன்மார்கட்டைச் சேர்ந்த குமரகுருபரன் விஜயகாந்தன் என்பவருக்கு 11 ஆயிரம் ரூபாவும் -

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த கந்தையா யோகரத்தினம் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் - கண்டி வீதி அரியாலையைச் சேர்ந்த குணசிங்கம் கிருபாகரன் என்பவருக்கு 11ஆயிரம் ரூபாவும் -

அபராதமாகச் செலுத்துமாறு கடந்த திங்கட்கிழமை யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். கைப்பற்றப்பட்ட மணலை யாழ். பள்ளிவாசலுக்கு வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ஒ-ரி)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மே27

அனுமதிப்பத்திரமின்றி சாராய விற்பனையில் ஈடுபட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஐவருக்கு யாழ்.நீதிமன்றம் 28ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

தண்ணீர் தாங்கி வீதி குருநகரைச் சேர்ந்த சிங்கராசா ரஞ்சித், நாச்சிமார் கோயிலடி வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சுப்பையா கிருபாகரன், தலையாளி கொக்குவிலைச் சேர்ந்த நடராஜா சதீஸ், யாழ்.ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் தர்மராசா ஆகியோருக்கு தலா 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும் தலா 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமாகவும் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதே குற்றச்சாட்டின் பேரில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சண்முகரத்தினம் தனேஸ்வரன் என்பவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும், 3ஆயிரம் ரூபா தர்மப்பணமாகவும் செலுத்துமாறும் யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்கினராஜா உத்தரவிட்டார். (ஒ-ரி)

☆ ☆ ☆

வலி.வடக்கு,மே27

அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் விற்ற மூவருக்கு மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

சுன்னாகம் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த நவரத்தினம் நரேந்திரன், அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த நாகமுத்து கந்தசாமி, இணுவில் தியேட்டர் ஒழுங்கையைச் சேர்ந்த சரவணமுத்து வர்மகுமார் ஆகியோரே அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் தண்டனை பெற்றவர்கள் ஆவர்.

இதேசமயம், கசிப்புக் காய்ச்சும் உபகரணம் வைத்திருந்தமைக்காக பரிசையபுலம் குப்பிளான் தெற்கைச் சேர்ந்த யோகராசா வசந்தகுமார் என்பவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-86)

☆ ☆ ☆

தென்மராட்சி,மே26

அனுமதியின்றி மணல் ஏற்றிச்சென்ற லொறியினை ஆறு மாதங்கள் நீதிமன்றப் பொறுப்பில் வைத்திருக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டின்கீழ். சாவகச்சேரி பொலீஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் மணலை அகழ்ந்த இடத்திலேயே கிராம அலுவலர் முன்னிலையில் பறித்துவிட்டு லொறியை நீதிமன்றப் பொறுப்பில் விடுமாறு உத்தரவிட்டார். (ஒ-117)

## தொண்டைமானாறு செருடையம்பதி வீரமாகாளி அம்பாள்

**மஹோற்சவத்தின் 9 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்**

28-05-2004 வெள்ளிக்கிழமை

**வனமஹோற்சவம் - ஊர் இளைஞர்கள் திருவிழா**

**பகல் நிகழ்ச்சிகள்** — **மங்கள இசை**

காலை 9.00 மணிக்கு L.S. ஜெகநாதன குழுவினர்
அம்பாளுக்கு ஸ்நபன அபிஷேகம், விசேட பூசை
முற்பகல் 11.00மணிக்கு தம்பபூசை
11.45 மணிக்கு வசந்தமண்டபப் பூசை
பின்பு அம்பாள் வீதியுலா வந்து வனத்தில்
3.00மணிவரை காட்சி தருவார்.

**இரவு நிகழ்ச்சிகள்** — **மங்கள இசை**

மாலை 7.00 மணிக்கு L.S. ஜெகநாதன குழுவினர்
மாலை 9.00மணிக்கு சப்தஸ்வர சாந்தன இணைந்து
வழங்கும் இனிய கானங்கள்
சிவலிங்கத்துடன் அம்பாள் வீதி வலம்வரும்
காட்சியும் இடம்பெறும்.

பிரதமகுரு: *கிரியாகலாமணி*
பிரம்மஸ்ரீ க. நாகேஸ்வரக் குருக்கள்
(எழுதுமட்டுவாழ்)
*அடியார்கள் வருக! அம்பிகை அருள் பெறுக!!*

தொண்டைமானாறு. - ஊர் இளைஞர்கள்.
(32283) (26-42-14)



## அமரர் செ. ஸ்ரீநிவாசன் நினைவு

(முன்னாள் அதிபர், பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)



திதி: 27-05-2004 அட்டமி

எங்கள் வாழ்வில் தமது அயராத உழைப்பால் கல்விப் பணியை கடவுள் பணியாக வாழ்ந்து காட்டியவர்

இன்று பி.ப.3.30 மணிக்கு எனது இல்லத்தில் நினைவுரை நடைபெறும். அன்பர்கள் யாவரையும் நினைவு வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றேன்.

அழைப்பு: அன்பு மகள்
க.பராசத்தி.

பண்ணாகம், சுழிபுரம்.
(சி-35163) (26-14-42)



## உதிர்ந்து போன உயிர்ப்பூவின்

பிறந்தநாள் நினைவலைகள்

மண் மகிழ 27 - 05 - 1976



கண் நெகிழ 18 - 05 - 2004

### திருமதி ஜீவகன் பிறேமலதா (லதா)

புன்னகைப்பூவே ~ லதா!
பாசமுடன் பழகி நேசமுடன் அரவணைத்து
தேசத்தை விட்டேகி லண்டன் மண்ணில்
அணைந்த செய்தி வந்ததே! எப்படி நம்புவது?
மார்கழித்திங்கள் அல்லவா! மதிகொஞ்சும் நாளல்லவா!
கைவழி நயனம் செல்லக் கனிநடம் புரிந்தாய் அன்று
விதி வழி சென்றாயோ இன்று?

வாழைக்குத் தானீன்ற காயே கூற்றமாம்
உன் வாழ்வும் அதனுடன் இணைந்து விட்டதா?
ஒருயிரை ஈந்துவிட்டு உன் இன்னுயிரைப்
பறித்த செய்தி கேட்டுப் பதறிப்போனோம்!

நட்சத்திரங்களும் இருபத்தேழுதான் ~ அந்த
இருபத்தேழாம் எண்ணில் புவிமகிழவந்தாய்!
அந்நாளே பூமண வாழ்வுங் கொண்டாய்!
உன்னை நினைந்து விதியை நொந்து
கண்கள் நனைந்து உன் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம் இன்று!

-97/98ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு
**பாசமிகு நண்பர்கள், நண்பிகள்**

(32317)(42-14)


## மயானத்தில் 6 தினங்கள் துப்புரவுப் பணிகள்

யாழ்ப்பாணம்,மே27

காக்கைதீவு - எருக்கலம்பிட்டி இந்து மயானம் 6 தினங்கள் முழுமையான வேலைத்திட்டத்தின் கீழ் துப்புரவு செய்யப்பட்வுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் பி.விக்டர் மேற்கொண்டுள்ளார்.

முழுமையான மயான புனரமைப்பு வேலைத்திட்டத்தினை ஆனைக்கோட்டை உப அலுவலக ஊழியர்களும் மானிப்பாய் பட்டின உப அலுவலக ஊழியர்களும் இணைந்து மேற்கொள்ளவுள்ளனர்.

இன்றும் நாளையும் முதலாம் கட்டமாகவும் அடுத்த மாதம் 1ஆம், 2ஆம்,3ஆம் திகதிகளில் இரண்டாம் கட்டமாகவும் வேலைகள் இடம் பெறவுள்ளன.

மேற்படி வேலைத்திட்டங்களை வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா பார்வையிடவுள்ளார்.

(ஐ-185)

## தரம் குறைந்த நல்லெண்ணெய்

வடமராட்சி,மே27

நெல்லியடி நகரப் பகுதியில் தரம் குறைந்த - பாவனைக்கு உதவாத - நல்லெண்ணெய் இரு வர்த்தக நிலையங்களிலிருந்து பறிமுதல் செயயப்பட்டுள்ளன.

இப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நடத்திய திடீர்சோதனை நடவடிக்கையின்போது பாவனைக்கு உதவாத தரம் குறைந்த 30 நல்லெண்ணெய்ப் போத்தல்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவை உடனடியாகப் பறி முதல்செய்யப்பட்டு அழிக்கப் பட்டன. (ஐ-173)

## சமய அறிவுப் போட்டி

கோண்டாவில்,மே27

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மத்திய கிராம முன்னேற்றச் சங்கமும், மத்திய சனசமூக நிலையமும் இணைந்து சமய அறிவுப் போட்டியை நடத்தவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது. இது பற்றிய விவரங்களை மத்திய சனசமூக நிலையத்தில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-49)

## காரைநகரில் கணனிப் பயிற்சி

காரைநகர்,மே27

காரைநகர் பிரதேச செயலகம் நடத்தும் மனிதவள அபிவிருத்திக் கணனிப்பயிற்சி நெறியின் இரண்டாவது பிரிவு அடுத்தமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

காரைநகர் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் இணைந்துகொள்ள ஆர்வமுடையவர்கள் பிரதேச செயலகத்துடன தொடர்புகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (ஐ-73)

## பெண்கள் நலன் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே27

பெண்களின் உடல்நலம் சம்பந்தமான கலந்துரையாடல் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

'பெண்களுடைய உடல்நலம் சம்பந்தமான பிரச்சினைகள் - தீர்வுக்கான வழிவகைகள்' என்ற கருப்பொருளில் யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் யிபவானி கருத்துரை வழங்குவார்.

கலந்துரையாடலுக்கு முன் பிரச்சினைகளை எழுத்துமூலம் அனுப்பி வைத்து ஆர்வலர்களைப் பயன்பெறுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-ரி)


**நாவல்கள்**

செங்கை ஆழியானின் புதிய நாவல்கள்-போரே நீ போ, வானும் கனல் சொரியும், சாம்பவி, ஈழராஜா எல்லாளன், கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும, மற்றும்.. கிடுகுவேலி, யானை, குவேனி, காவோலை, ஆச்சி பயணம் போகிறாள்.. பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன.

75/10A,பிறவுண் வீதி,
நீராவியடி,யாழ்ப்பாணம்.
(32286)



## ஊடகமே உலகம்

(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி

**DIPLOMA IN MASS MEDIA**
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. M.M. (Sri Lanka)

**DIPLOMA IN BROADCASTING**
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. B.C. (Sri Lanka)

சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்

**தபால் மூலம்**

6 மாத கால பாடநெறி

தொடர்பு: (011) 4512830

**MMIC** 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,



## அஞ்சலி

திருநெல்வேலி
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
வைகாசி விசாகப் பொங்கல்
நாயக வளநெடுத்தலை 155 ஆண்டுகளுக்கு முன்
ஆரம்பித்த திருநெல்வேலி கிழக்கு
சமரபாகு தேவன் வளவு
"கல்வீட்டார்" நாகப்பர் வைத்திலிங்கம்
அவர்களின் பூட்டனும்
நாயக வளந்தின் 12 ஆம் உரிமைகாரருமான
அமரர்

**சின்னராசா ஜெயாநந்தன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
அம்மன் திருவருளை வேண்டுகின்றோம்.

**காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்**
மூன்றாம் உரிமைகாரர்.
(C/35210)(38-14-42)



## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 - 05 - 31



உதிர்வு 27 - 05 - 98

**அமரர் வைத்திலிங்கம் கனகரெட்ணம்**

(யாழ். மாநகரசபை முன்னாள் சாரதி)

ஆறாம் ஆண்டை நோக்கி நீர்
ஆறாத்துயரில் தவிக்கும் நாம்

உம் பிரிவால் துயருறும்:
மனைவி - மோட்சலெட்சுமி
மகன் - சதீஸ் (Finland)
மகள் - கமலினி
(இராமநாதன் நுண்கலைக்கழகம்)

(32280)(42-14)



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பூலோக மலர்வு 26 - 02 - 1950



பரலோக நுழைவு 27 - 05 - 2002

**அமரர் கதிரவேலு செல்வராசா** (மணி)

ஆண்டிரண்டு போனதையா
ஆனாலும் உம் திருவதனம்
அழியாத நினைவுகளாய்
எப்பொழுதும் அசைபோடும்!
தனியான மரமாய் நீர்
தவிக்க விட்டுச் சென்றீரோ?
எத்தனை நாள் ஏங்கிடுவேன்
என்னவரே!
எண்ணி எண்ணிப் புலம்புகிறேன்
இறைவன் திருவடியை!

*மில் லேன்,*
*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*

- மனைவி, உறவினர்.

(32279)(42-14)

# வழமைக்கு மாறான காலநிலையால் புகையிலைச் செய்கை பெரும் பாதிப்பு

தெல்லிப்பழை,மே27

சமீபகாலங்களில் நிலவிய அதிக வெப்பம், திடீர் மழை என்பன காரணமாகக் குடாநாட்டின் பிறபருவ புகையிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகப் புகையிலைச் செய்கையாளர்கள் கூறுகின்றனர்.

குளிர் காலநிலையைக் கருதி வழமையாக மார்கழி மாதத்திலேயே புகையிலைப் பயிர்ச்செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றபோதிலும் குடாநாட்டு விவசாயிகள் பிற்பருவப் புகையிலைச்செய்கையிலும் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சமீபத்தில் நிலவிய கடும் வெப்பநிலையுடன் கூடிய வரட்சிக் காலநிலையையும் தொடர்ந்து ஏற்பட்ட மழைவீழ்ச்சியும் புகையிலைக் கன்றுகளைப் பாதித்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இலை சுருளுதல், அடியழுகல், மணிவேர் பற்றுதல் போன்ற தாக்கங்களுக்குப் புகையிலைக் கன்றுகள் இலக்காகியிருப்பதாகவும் இதனால் இம்முறை புகையிலைச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் வலி. வடக்கு, வலி. தெற்குப் பகுதிகளில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் தெரிவித்தனர். இத்தாக்கங்கள் காரணமாக கன்றுகள் பாதிக்கப்பட்டுள்ளன. கன்றுகளின் சந்தை விலைகளும் வீழ்ச்சியடையக்கூடும் என அவர்கள் கவலை கொண்டுள்ளனர். (ஐ-150)

# குடும்பநல உத்தியோகத்தர் ஆள்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே27

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் பொருட்டு குடும்பநல உத்தியோகத்தர்களைப் பயிற்சிநெறியில் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்தமாதம் 11ஆம் திகதி யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பத்தில் கோரப்பட்டவாறு தகுதிகளையுடைய அனைவரும் அழைக்கப்படவுள்ளனர் என்றும் -

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான அனுமதிக்கடிதங்கள் தனிப்பட்ட ரீதியில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் -

யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி)

## வீதி விளக்குகள் ஒளிரவில்லை

கோண்டாவில்,மே27

கோண்டாவில் கிழக்கு சென். செபஸ்தியார் வீதியோரத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் ஒளிராத காரணத்தினால் இரவுவேளைகளில் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஒளிராத மின்குமிழ்கள் இதுவரை திருத்தியமைக்கப்படாமை குறித்துப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-49)

# நிரந்தரக் கட்டடம் இன்றி இடத்துக்கிடம் மாறிமாறி இயங்கும் நகரசபை அலுவலகம்

வடமராட்சி,மே27

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் இல்லை. அதனால் அலுவலகத்தை அமைப்பதற்கு வாடகைக்கோ அன்றேல் குத்தகைக்கோ இடம் ஒன்றைத் தேடும் முயற்சியில் அலுவலக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

நகரசபைக்குச் சொந்தமான நிலமும் கட்டடமும் தற்போது உயர்பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பருத்தித்துறை நகரப்பகுதியில் கடற்கரை பிரதான வீதியில், கல்லூரி வீதியுடன் இணைந்து இருந்தன.

படையினர் பருத்தித்துறை துறைமுகத்தில் முகாமிட்டு இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்ததைத் தொடர்ந்து குறிப்பிட்ட அலுவலகத்துக்குப் பணியாளரும், பொதுமக்களும் சென்றுவர முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், பருத்தித்துறை நகரசபை அலுவலகம் கடந்த 1984ஆம் ஆண்டு சபைக்குச் சொந்தமான கல்லூரி வீதியில் இருந்த மின்சாரநிலையக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. இந்தப் பகுதியிலும் இராணுவக் கெடுபிடிகள் மோசமானதால் 1985ஆம் ஆண்டளவில் பருத்தித்துறை - தும்பளை வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டது. பின்னர் 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிவன் கோயிலுக்கு அருகில் தும்பளை வீதியில் உள்ள தனியார் கட்டடத்துக்கு மாற்றப்பட்டது.

தற்போது பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு அருகில் இரண்டாம் குறுக்குத் தெரு வீதியுடன் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் நகரசபை அலுவலகத்தை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு கட்டடத்தைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கட்டட உரிமையாளர் நகரசபைக்கு அறிவித்துள்ளார்.

இதன் காரணமாக நகரசபை அலுவலகம் அமைக்கக் கட்டட வசதிகள் இல்லாத நிலையில், நகர எல்லைக்குள் தனியார் கட்டடங்களைத் தேடிக் கண்டுபிடித்து அலுவலகத்தை இயங்கவைக்கும் நடவடிக்கைகளில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

(ஐ-173)

# கைதடிப் பகுதி மக்களுக்கு சீரற்ற வீதிகளால் சிரமம்

கைதடி,மே27

குண்டுங்குழியுமான வீதிகளினால் போக்குவரத்தைச் சீராக மேற்கொள்ள முடியாமல் தவிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகக் கைதடிப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியிலுள்ள வீதிகளில் பெரும்பாலானவை கடந்த பல வருடங்களாகவே திருத்தப்படாமல் போக்குவரத்துக்கு ஒவ்வாதவகையில் உள்ளன. இவ்வீதிகளின் அவலநிலை சம்பந்தமாக இங்குள்ள சனசமூக நிலையங்கள் உட்படப் பொது அமைப்புகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டபோதும் இதுவரை இவ்வீதிகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

வடக்கு வீதி, மேற்கு நேவத்தை வீதி, கலைநகர் வீதி, மத்தி வளர்மதி வீதி, நவபுரம் வீதி எனப்பல வீதிகள் பரிதாப நிலையில் பாழடைந்து காணப்படுகின்றன.

இவ்வீதிகளில் பலவும் 2000ஆம் ஆண்டு யுத்த நடவடிக்கையின்போது எறிகணை வீச்சினால் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, கைதடி வடக்கு வீதியைத் திருத்துவதற்கு முன்னர் நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் இதுவரை அந்த வீதியைத் திருத்துவதற்கான ஆயத்தம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்டோர் உரிய காலத்தில் இங்குள்ள வீதிகளைத் திருத்துவதற்கான நடவடிக்கையினை உடனடியாக மேற்கொண்டு மக்கள் போக்குவரத்தைச் சீராக்க வேண்டும் என்று இங்குள்ள பொது மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-75)

# மாநகர சபையிலிருந்து 29 பேர் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,மே27

யாழ். மாநகரசபையில் கடமையாற்றிய 29 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். உள்ளூராட்சி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் ஐந்து வருட கால அரச சேவையைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களே இடமாற்றம் பெற்றுள்ளனர்.

மாநகர சபையில் எழுதுநர்களாகக் கடமையாற்றிய ஏ.குருநாதன், பி.இராமநாதன், ஆர்.தங்கராஜா, ரி.விநாயகமூர்த்தி, திருமதி சி.இந்துமதி, திருமதி இ.வரதராஜா, திருமதி ம.செல்லத்துரை, திருமதி ர.ரஞ்சினி, வ.அமிர்தகுலசிங்கம், எஸ்.விஜயரங்கன், கே.சங்கரலிங்கம், திருமதி ஸ்ரீதரன் சத்தியபாமா, திருமதி விஜயலக்சுமி முருகையா, அவாமலோஜினி, ஆ.ஞானமலர், ஏ.ஏகாந்தசிவம், பொ. அமிர்தலிங்கம், வி.புவனேந்திரன், திருமதி ம.மகாலக்சுமி, ஆர்.மதுரநாயகம், நா.சோதிலிங்கம், க.சரவணபவன், க.பூபாலாப்பிள்ளை, திருமதி ஜீ.மனோன்மணி ஆகியோரும் -

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் எஸ்.இராஜரட்ணம், எம்.கலாவர்மன், கணக்குப் பதிவாளர் என்.போலிங்கம், தட்டெழுத்தாளர்கள் திருமதி சி.சாந்தினி, தே. மரியராணி ஆகியோர் அடுத்த முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர்.

(ஐ-ரி)

## சாயி சிந்தனை

### அன்பே உண்மையான கடவுள்



**கோ**பம் என்பது என்ன? அது ஒரு மிருக குணம். கோபம் வரும்போது பத்துமுறை விடாமல் நான் ஒரு மனிதன். நான் நாய் அல்ல என்று சொல்லுங்கள். கோபம் விலகிப்போய்விடும். நம்மிடம் குதிரையைப் போன்ற குணங்கள் இருக்கின்றன. எத்தனையோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. நான் ஒரு குரங்கல்ல. நான் ஒரு மனிதன் என்று எண்ணுங்கள். மனதின் அலைச்சல் அடங்கிவிடும்.

கோபம், காமம், வெறுப்பு, பொறாமை எல்லாம் மிருகக் குணங்கள். அன்பு, சத்யம், தியாகம், பொறுமை, இரக்கம் போன்றவை மனித குணங்கள். நாம் மனிதராகப் பிறந்துவிட்டு மிருக வாழ்க்கை வாழ்கிறோம். நாம் இத்தகைய தீய குணங்களை விட்டுவிடவேண்டும். மேலும் மேலும் அன்பை வளர்த்துக்கொள்ளவேண்டும். அன்பே உண்மையான கடவுள். இந்தத் தெய்வீக அன்பைத் தினந்தோறும் வளர்த்துக்கொள்ள வேண்டும். கடவுள் உன்னிடமிருந்து வேறாக இல்லை. கடவுள் உன்னிடமே இருக்கிறார். நீயே கடவுள். உன்னிடம் இருக்கும் தெய்வத்துவத்தை ஏன் வீணாக்குகிறாய்?

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## ஞானச்சுடர் வெளியீட்டுவிழா

வடமராட்சி,மே27

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கமும், மதிப்புரையை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்துவார்கள்.

(ஐ-173)

# கல்விச்சாலைக் காட்சிகள்



கோண்டாவில் இந்துமகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு முதற்தடவை பரீட்சைக்குத் தோற்றிய (2003)ஆம் ஆண்டு மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதிபெற்ற செல்விகள் க.ஜெகதீஸ்வரி, இ.சங்கீதா ஆகிய இருவரும் மேற்படி வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்களால் கௌரவிக்கப்பட்ட பின்னர் எடுத்துக்கொண்ட படம். (10)



இடைக்காடு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சாரணர் சின்னம் சூட்டும் விழாவில் அதிபர் எஸ்.சித்திரவடிவேல் உரையாற்றுவதையும் யாழ். வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்.வரதராஜா, பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர் ஏ.ஜெகநாதன் உட்பட நிகழ்வில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம் *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்.)*



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் 'பாண்ட்' வாத்தியக்குழு அங்குரார்ப்பண வைபவம் அதிபர் திருமதி க.குணராசா தலைமையில் நடைபெற்றது. அப்போது இடம்பெற்ற அணிவகுப்பின்போது எடுக்கப்பட்ட படம். (ஒ)



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் நடைபெற்ற கால்கோள் விழாவின்போது அதிபர் செ.சிவநடராசா பாடசாலைக் கொடி ஏற்றுவதைப் படத்தில் காணலாம். *(படம்: ஏழாலைச் செய்தியாளர்)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் நம்பர் 1 பகிரா இன புறோயிலர் குஞ்சுகளும் 28.05.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No.: 2867, 3529. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.(32548)

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், அழகுசாதனப் பொருள்கள், பூச்சாடிகள், பூங்கன்றுகள், மஞ்சள் மொசந்தாஸ், டல்மேசன், அல்ஷேசன் நாய்க்குட்டிகள், நாய்க் கூடுகள், லவ்பேர்ட்ஸ், குருவிக்கூடுகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர்லேன், தட்டாதெரு, யாழ்ப்பாணம். (32310)

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட அழகிய Cocker Spaniel நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.90, கிறீன் வைத்திய சாலை முன்பாக, மானிப்பாய்.(32323)

இரட்டைக்கதவு, Samsung குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 59, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (32129)

Inter Pentium - III Computer 1.2 G.HZ 20 GB Samtron Monitor உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (32347)

## வாடகைக்கு

காங்கேசன்துறை வீதி, நாவலர் வீதிச் சந்திக்கு அண்மையில் இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: செ.பரமசிவம்பிள்ளை, 551, காங்கேசன்துறை வீதி (மனோகராச் சந்தி), யாழ்ப்பாணம். (32281)

பருத்தித்துறையில் இல.395,பிரதான வீதி றோயல் கட்டடத்தில் தொலைத் தொடர்பு நிலையம் நடத்த வசதியான கடை வாடகைக்குண்டு. தொடர்பு: 395, பிரதான வீதி, பருத்தித்துறை.(சி-35218)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சைவபோசன, 36 வயது, ரேவதி நட்சத்திரம், பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு தாயார் வரன் தேடுகிறார். தொடர்பு: விளம்பர இலக்கம் 2275 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.(32327)

யாழ்கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த, உத்தராடம், 7இல் செவ்வாய், கிரகபாவம் 37, சிவந்த, மெல்லிய, அழகான, படித்த மணமகளுக்கு மணமகன் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும். வி. இல. 2277, மே/பா உதயன்.(32361)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

Sagem - Mc 3000 ரக கைத்தொலைபேசியொன்று 26-05-04 புதன்கிழமை காலையில் பருத்தித்துறை வீதி, கட்டப்பிராயில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் 077-6179711 என்ற கைத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும். (32348)

## தவறிவிட்டது

கிருஸ்ணன் சுபாகரன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் (இல. A178332) மற்றும் 52-தொடர் இலக்கமுடைய ஹைஏஸ் வானுடைய காப்புறுதிப்பத்திரமும், வரிப்பத்திரமும் (25-05-2004) அன்று ஊர்காவற்றுறை பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுதவர்கள் ஸ்கை ரோய்ஸ் ஒலிப்பதிவு கூடம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.(30342)

அச்சுவேலியில் இருந்து வல்வெட்டித்துறைக்குச் செல்லும் வழியில் 23.05.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று குருக்கள்மார் அணியும் கைக்காப்பு ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவாகள் தி.ஜெயச்சந்திராக்குருக்கள், தீத்தாங்குளம் பிள்ளையார் கோயில், பத்தைமேனி, அச்சுவேலி. T.P.: 077-6199971 எனும் முகவரில் ஒப்படைகக வும். சன்மானம் வழங்கப்படும்.(32342)

## யூரியா விலைகுறைப்பு

வலி.தென்மேற்கு,மே27

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இவ்வாரம் முதல் யூரியா உரத்தின் விலையைக் குறைத்துள்ளது. 950 ரூபாவாக விற்கப்பட்டு வந்த 50 கிலோ நிறையுள்ள யூரியாப் பக்கற் தற்போது 750 ரூபாவாக விற்கப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-135)

**HTL COMPUTER SYSTEM**
THE HUMAN TECHNOLOGY LAND

PI முதல் P IV வரையான கணனிகள் விற்பனைக்கு உண்டு.
புத்தம் புதிய
PIV COMPUTER -43,000/-

(C-32359)

தேவை

தமிழ் ரைப்பிங் செய்யக்கூடிய பெண்பிள்ளை தேவை. இன்று காலை 10.00 மணிக்குப் பின் நேரில் வரவும்

தொடர்புகளுக்கு:
T.Charles Dickens,
021-222-3292
021-222-2875

இல.44, புதுவீதி
கொய்யாத்தோட்டம்,
பலாலி யாழ்ப்பாணம்.

## நெஞ்சை விட்டகலாத நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **நாகலிங்கம் சிவசோதி**

S.L.P.S.-1

(முன்னாள் அதிபர். யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம்)

திதி: வைகாசித் திங்கள் பூர்வபக்க அட்டமி

*கண்ணுக்குள் மறையவில்லை உங்கள் முகம்*
*நெஞ்சை விட்டு அகலவில்லை உங்கள் நினைவு*
*ஆண்டுகள்தான் நான்கு சென்றாலும் – எம்வாழ்வில்*
*உங்கள் அன்பு எம்மைவிட்டு நீங்காது!*

தோற்றம் 03-12-1946 மறைவு 09-06-2000

நுணாவில் மேற்கு.
சாவகச்சேரி.

மனைவி, மக்கள், சகோதரர்கள், உறவினர்கள்.

(32334)(34-21-13-14)

## பதினேழாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 03 – 04 – 1930



மறைவு 27 – 05 – 1987

**அருளம்பலம் முத்துராஜா**

(முன்னாள் உபதபாலதிபர், தொண்டைமானாறு)

அன்பாய் ஆதரவாய் எம்முடன் வாழ்ந்து
எம்மில் ஒன்றிக் கலந்துவிட்ட அப்பாவே!
பதினேழு ஆண்டுகள் கடந்து போனாலும்
என்றும் உங்களை மறக்காது எம் இதயமே!

- அன்பு மனைவி, மக்கள், மருமகள்.

*காளிகோயிலடி,*
*கெருடாவில்,*
*தொண்டைமானாறு.* (32336)(26-13-14-21)

## மாவின் விலை அதிகரிக்கப்படலாம

கொழும்பு,மே27

பிறிமா நிறுவனத்துக்கு அரசு செலுத்த வேண்டிய நிலுவையை செலுத்தத் தவறினால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் கோதுமை மாவின விலையை கிலோ ஒன்றிற்கு 4ரூபா 40 சதத்தால் அந்த நிறுவனம் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.(ஒ-9)

## இளைஞரைக் காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே27

அரியாலை மாம்பழம் சந்தியைச் சேர்ந்த ஜேசுராஜா ஜெனட்சன் (வயது 19) என்ற இளைஞர் காணாமற்போயுள்ளார் என்று யாழ். பொலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவர் மாம்பழம் சந்திப் பகுதியில் உள்ள ஓட்டுத் தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்பவர் என்றும்-

கடந்த செவ்வாய்க்கிழமை காலை வேலைக்குச் சென்ற அவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்றும் அவருடைய தந்தை யாழ் பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

(ஒ-7)

## அழகுக் கலைகளைப் பயின்று அழகு பார்ப்பதற்கு யாழ்.குடாநாட்டு மகளிருக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்!



பிரபல அழகுக்கலை நிபுணர்

**திருமதி பிறேமா ஜெகன்**

(Dip.in Beauty Culture,India)

அவர்கள் 3 நாள்களுக்கு வகுப்புகளை நடத்த வருகைதரவுள்ளார்.

**இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கேட்போர் கூடம்**

**30-05-2004 (ஞாயிறு) காலை 9.30 முதல் மாலை 4.00 வரை**

1) EYE BROW THREADING
2) BLEACH - TWO TYPES
3) BASIC FACIAL - TWO TYPES
4) WAXING
5) BRIDAL DRESSING (மணப்பெண் அலங்காரம்)

முழுக்கட்டணம் ரூபா 1000/- மட்டும்

*31-05-2004 (திங்கள்) வகுப்புகள் நடைபெறமாட்டாது*

**01-06-2004 (செவ்வாய்) காலை 9.30 முதல் மாலை 4.00வரை**

*கூந்தல் அலங்காரம்*

1) HAIR PERMING
2) FASHION HAIR COLOUR
3) HAIR REBONDING STRAIGHTENING
4) GALVANIC FACIAL & HIGH FREQUENCY
   I. முகப்பருவுக்கான சிகிச்சை
   II. பொடுகுக்கான சிகிச்சை

முழுக்கட்டணம் ரூபா 1000/-மட்டும்

**02-06-2004 (புதன்) காலை 11.00 முதல் மாலை 5.00 வரை**

1) UPLIFTING முகச்சுருக்கத்தை நீக்கும் FACIAL
2) AROMA MAGIRAL
   I. SILVER FACIAL
   11. PERL FACIAL
3) AROMA THERAPY
4) GLABRA FACIAL

முழுக்கட்டணம் ரூபா 1000/- மட்டும்

*மேலும் விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.*
*தொலைபேசி இல. 0777 - 439263*

தொடர்ச்சியாக 3 வகுப்புகளுக்கும் சமுகமளிப்போருக்கு கட்டணத்தில் விசேட கழிவு உண்டு. (C/35203) (26-14-13-21)

## யாழ்ப்பாணத்தில் – கண்ணிவெடி அகற்றுவோருக்கான பதவி வெற்றிடங்கள்

Danish Demining Group இல் (DDG) யாழ்.மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் கண்ணிவெடி அகற்றுவதில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து கண்ணிவெடி அகற்றுவோருக்கான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தகைமைகள்:

★ நல்ல உடற்தகுதியும் தேகாரோக்கியமும்
★ ஆகக் குறைந்தது 20 வயது
★ 8 ஆம் வகுப்பில் சித்தி
★ கடுமையான உழைப்பு

இதற்கான பயிற்சிகள் வவுனியா மாவட்டத்தில் ஜூன் மாத நடுப்பகுதியில் தொடங்கி 3 வாரங்களுக்கு நடைபெறும்.

### நேர்முகத்தேர்வு பற்றிய விவரம்:

விண்ணப்பதாரிகள் பின்வரும் திகதிகளில் நேர்முகத்தேர்வுக்காகக் கற்கோவளம் ஆரம்பப்பாடசாலை, பருத்தித்துறையிலுள்ள D.D.Gயின் முகாமுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

★ 29.05.2004 சனிக்கிழமை மு.ப. 11.00, பி.ப 3.00
★ 30.05.2004 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8.00 பி.ப 2.00

நேர்முகத்தேர்வுக்கு வரும்போது தன்வரலாறு, சொந்த விவரங்கள் அடங்கிய சுயவிவரக்கோவை, தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி எண், மூலச்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் சமுகமளிக்கவும்.

Danish Demining Group - 2006ஆம் ஆண்டின் முடிவுக்குள் கண்ணிவெடியின் தாக்கங்களிலிருந்து இலங்கையை விடுவிப்பதற்கு உதவும் ஒரு தேசிய, சுயாதீன, மனித நேயமுள்ள, அரசசார்பற்ற அமைப்பு.

(சி35212)(37-14-13-21)

# பாகிஸ்தான் துறைமுகத்தில் குண்டு வெடித்து மூவர் மரணம்!

பாகிஸ்தான் நாட்டில் கராச்சி நகரில் மிகப்பெரிய துறைமுகம் உளளது. இங்குள்ள 17ஆவது இலக்க வாயில் வழியாக வெடி பொருள்களைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு இருந்தனர். இந்தப் பணியில் ஏராளமான ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக ஒரு பொதியில் இருந்த குண்டு வெடித்துச் சிதறியது. இதனால் குண்டு வெடித்த பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சி அளித்தது.

சரக்குப் பொருள்களைக் கப்பலில் ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பலரும் இந்தக் குண்டுவெடிப்பில் சிக்கினார்கள்.

குண்டு வெடிப்பில் குறைந்தது 3பேர் பலியானார்கள்; ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர். பொலீஸ் தரப்பு கூறும்போது யாரும் பலியாகவில்லை. சிலர் காயம் மட்டுமே அடைந்துள்ளனர் என்றனர். ஆனால், சிகிச்சை அளிக்கும் ஆஸ்பத்திரி நிர்வாகம் 3 பேர் பலியானதை உறுதி செய்தது. (ஓ)

# கரீபியன்தீவு நாடுகளில் கடும்மழை: வெள்ளத்தில் சிக்கி 500 பேர் பலி!

கரீபியன்தீவு நாடுகளான ஹெய்ட்டி மற்றும் டொமினிக்கன் குடியரசு ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பெரும வெள்ளத்தால் 500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்; பல ஆயிரக் கணக்கானவர்கள் இருப்பிடங்களை இழந்துள்ளனர்.


ஒரே தீவுப் பகுதியில் உள்ள இந்த இரு நாடுகளிலும் கடந்த ஒருவார காலமாகக் கடும்மழை பெய்து வருகிறது. இதனால் டொமினிக்கன் குடியரசில் உள்ள இரு நதிகள் உடைப்பெடுத்தன. இதில் ஹெய்ட்டி எல்லையில் உள்ள ஜிமானி என்ற சிறிய நகரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இதேவேளை, ஹெய்ட்டியிலும் கடும் மழை பெய்வதால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதில் சிக்கி நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இருநாடுகளுக்குமிடையே உள்ள எல்லைப்புறப் பிரதேசம் வெள்ளத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த நூறு ஆண்டுகளில் கரீபியன்தீவு நாடுகளில் ஏற்பட்ட மிக மோசாமான இயற்கை அனர்த்தம் இது வென்று கூறப்படுகிறது. மழை மேலும் தொடரும் என்று வானிலை அவதான நிலையங்கள் கூறுகின்றன. இதனால், வெள்ளம் மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

வெள்ளத்தில் மட்டுமல்லாது நிலச சரிவுகளிலும் கட்டட இடிபாடுகளுக்குள்ளும் சிக்கி ஏராளமானவர்கள் காணாமற்போயுள்ளனர். அதனால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகம் என்று மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

அவசர மீட்புப் படையணிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. ஹெய்ட்டியில் நிலைகொண்டுள்ள அமெரிக்க, கனேடிய இராணுவத்தினரும் இந்தப் பணிகளில் பங்கேற்று வருகின்றனர். ஆயினும், மோசமான காலநிலை காரணமாக மீட்புப் பணிகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது. (ஒ)



டொமினிக்கன் குடியரசில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களில் ஒருகாட்சியையும், உயிரிழந்த ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு எடுத்துவருவதையும் படங்களில் காணலாம்.

# வட,தென்கொரியாக்களிடையே இராணுவ உயர்மட்டப் பேச்சு

சியோல்,மே27

வடகொரியா மற்றும் தென் கொரியா நாடுகளின் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் இரு நாடுகளுக்குமிடையே நிலவும் பதற்றத்தைத் தணிக்கும் பேச்சை ஆரம்பித்துள்ளனர். கொரியப் போரின் பின்னர் பிரிந்த இந்த இரு நாடுகளுக்குமிடையே நிலவி வந்த முறுகல் நிலை கடந்த சில ஆண்டுகளாக ஓரளவு சீரடைந்துவருகிறது. இதனையடுத்தே இப்பேச்சு இடம்பெறுகிறது.

இரு தரப்புகளிடையேயும் முன்னர் அரசு மட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தாலும் பாதுகாப்பு மட்டத்தில் பேச்சு நடத்த வடகொரியா பின்னடித்து வந்தது. தென் கொரியாவில் 37ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் நிலைகொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஆயினும், இரு நாட்டுக் கடற்படைகளும் அடிக்கடி மோதலில் ஈடுபடுவதைத் தடுக்க பேச்சுநடத்த வேண்டும் என்று தென்கொரியா வலியுறுத்தி வந்தது.

இந்தநிலையிலேயே, வடகொரிய எல்லையில் உள்ள ஓய்வுத்தலமொன்றில் இரு நாடுகளினதும் இராணுவ உயரதிகாரிகள் சந்தித்துப்பேசி வருகின்றனர். இப்பேச்சின்போது கடலிலும், எல்லைப்புறத்திலும் ஏற்படும் மோதல்களைத் தவிர்ப்பது குறித்துத தென்கொரியாவும், பொருளாதார உதவிகள் குறித்து வடகொரியாவும் அதிக அக்கறை காட்டக்கூடும் என்று கருதப்படுகிறது. (ஒ)

# தமிழர் விடுதலை இயக்கத் தலைவர் தமிழகப் பொலீஸாரால் கைது!

சத்தியமங்கலம்,மே27

தமிழகத்தைத் தனிநாடாக உருவாக்கப் போராடிவந்தவரான தமிழர் விடுதலை இயக்கத் தலைவர் சு.ப. இளவரசன் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

தமிழ்நாட்டில் கடலூர், பெரம்பலூர் மாவட்டங்களில்தான் முதன் முதலாகத் தமிழ் தீவிரவாதிகள் 1970 ஆம் ஆண்டுகளில் உருவானார்கள். பெரம்பலூர், கடலூர், அரியலூர், ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், குவாகம், வல்லம் ஆகிய பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து தமிழ்நாடு விடுதலைப்படையைத் தோற்றுவித்தனர்.

ஆண்டிமடம் பகுதியில் முந்திரிக் காட்டில் பதுங்கிஇருந்து அவர்கள் தமது போராட்டங்களில் ஈடுபட்டனர். இதில் தமிழரசன் லெனின், குவாகம் ராமசாமி உட்படப் பலர் பொலீஸாரால் கொல்லப்பட்டனர்.

சுந்தரம், மாறன், முத்துக்குமார், ரேடியோ வெங்கடேசன், சத்தியமூர்த்தி, மணிகண்டன் உட்பட சில முன்னணி தமிழ் தீவிரவாதிகள் கைதாகிப் பல்வேறு சிறைகளில் அடைககப்பட்டுள்ளனர். இதனால் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு விடுதலைப்படைக்கு சுப.இளவரசன் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

கொடைக்கானல் தொலைக்காட்சிக் கோபுரத் தகர்ப்பு, சென்னை கத்திபபாரா நேரு சிலைப் பீடம் தகர்ப்பு, புத்தூர் பொலீஸ் நிலையம் தகர்ப்பு, குடமுருட்டி பாலம் தகர்ப்பு உட்பட பல தீவிரவாதச் சம்பவங்களில் இளவரசன் தலைமையிலான தமிழ் தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டிருந்தனர்.



சுப.இளவரசன்

1997ஆம் ஆண்டு சந்தனக்கடத்தல் வீரப்பனுக்கும், தமிழ் தீவிரவாதிகளுக்கும் ரகசியத் தொடர்பு இருப்பதாகக்கூறி தமிழ்நாடு, விடுதலைப்படையைத் தீவிரவாத இயக்கமாக அறிவித்தது; தமிழக அரசு தடைசெய்தது.

இந்நிலையில், சுப.இளவரசனை தமிழகப் பொலீஸ் கைதுசெய்தது. 2000ஆம் ஆண்டு விடுதலையான சுப. இளவரசன், தலைமறைவாக இருந்தபடி மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டார். தனது தலைமையிலான படைக்கு 'தமிழர் விடுதலை இயக்கம்' என்று பெயர் மாற்றினார் அவர்.

கடந்த 5 ஆண்டுகளாக அவர் வீரப்பன் கோஷ்டிக்கு ஆள்பலம் மற்றும் ஆயுதபலத்தை வழங்கி வந்தார் என்று தமிழக அரசு குற்றஞ்சாட்டி வந்தது.

சுப.இளவரசன் கோஷ்டியை முற்றிலுமாக ஒழிக்க கடந்த ஆண்டு ஜுன் மாதம் தமிழர் விடுதலை இயக்கத்தை தமிழக அரசு தடைசெய்தது. அதோடு, சுப.இளவரசனைக் கண்டதும் சுட உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து சுப.இளவரசன் தலைமறைவானார். கடந்த சில மாதங்களில் பல தடவைகள் அவர் பொலீஸ் பிடியில் இருந்து தப்பினார்.

இந்தநிலையில், தமிழ்த் தீவிரவாதி சுப.இளவரசன் நேற்றுமுன்தினம் இரவு அதிரடிப்படை பொலீஸாரிடம் பிடிபட்டார் சந்தன கடத்தல் வீரப்பனை சந்திக்க அவரும் 3 சகாக்களும் காட்டுக்குள் சென்றபோதே பிடிபட்டனர் என்று தமிழக அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

சுப.இளவரசனின் சொந்த ஊர் ஆண்டிமடம் அருகே உள்ள வல்லம் கிராமம் ஆகும். தந்தை பெயர் பால சுப்பிரமணியன். தாய் சுப்பம்மாள். 4 சகோதரர்களும் ஒரு தங்கையும் உள்ளனர்.

வளவெட்டி குப்பம் கிராமத்தைச் சேர்ந்த கவிதா என்ற பெண்ணை சுப. இளவரசன் திருமணம் செய்துள்ளார். அவர்களுக்கு சவியரசன் என்ற மகன் உள்ளான். (ஓ)

# ஜெயலலிதா மீதான வழக்குகள் குறித்துக் கருணாநிதி கருத்து

சென்னை,மே28

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது மத்திய நிதித்துறை அமைச்சகம் மற்றும் அமுலாக்கலபிரிவு தொடர்ந்த வழக்குகள் விரைவுபடுத்தப்படுமா என்ற கேள்விக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி பதில் அளித்தார்.

அண்ணா அறிவாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களை அவர் சந்தித்தார். அப்போது, மத்திய நிதித்துறையின் வருவாய்த் துறை இணையமைச்சர் பதவி தி.மு.க. அமைச்சர் பழனி மாணிக்கதுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜெயலலிதாமீது மத்திய நிதியமைச்சகம், பொருளாதாரக் குற்றப்பிரிவு பல்வேறு வழக்குகளை ஏற்கனவே தொடர்ந்துள்ளது. அவ்வழக்குகள் துரிதப்படுத்தப்படுமா என்று செய்தியாளர்கள் கருணாநிதியிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்கு, 'சட்டப்படி நடக்க வேண்டிய செயல்கள் தாமதமாக நடக்கக் கூடாது. விரைவுபடுத்தப்படவேண்டும். அது யார் மீதாக இருந்தாலும் சரி. ஆனால், தனிப்பட்ட யாரையும் குறிவைத்து அல்ல. பழிவாங்கும் காரியங்கள் நடைபெறாது, நடைபெறவும் கூடாது' என்று பதில் அளித்தார் கருணாநிதி.

# பாக்கு நீரிணையை நீந்திக்கடந்து சாதனை படைத்த கேரள வாலிபர்

இராமநாதபுரம்,மே27

இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த முரளிதரன் (வயது26) என்பவர் தலைமன்னார் -தனுஸ்கோடி இடையேயான கடல் பகுதியை கடந்த திங்கட்கிழமை 11மணிநேரத்தில் நீந்திக் கடந்து சாதனை படைத்தார்.

கேரள மாநிலம், திரு நெல்லூரைச் சேர்ந்த இவர், எர்ணாகுளத்தில் உள்ள ஹோட்டலில் பணிபுரிகிறார். தலை மன்னாரில் இருந்து திங்கட்கிழமை காலை இந்திய நேரப்படி 6.45 மணிக்குத் தனது நீச்சல் பயணத்தை முரளிதரன் ஆரம்பித்தார். அவருக்குப் பாதுகாப்பாக இலங்கைக் கடற்படையினர் சர்வதேச கடல் எல்லைவரை சென்றனர். பின்னர் சர்வதேச கடல் எல்லையில் இருந்து தனுஸ்கோடி அரிச்சமுனை கடல் பகுதிவரை இந்தியக் கடலோரக் காவல்படையினர். இவருக்குப் பாதுகாப்பளித்தனர்.

இவர் அன்று பிற்பகல் 5.45 மணிக்கு தனுஸ்கோடி அரிச்சமுனை கடற்பகுதியை அடைந்தார். தலைமன்னார் தனுஸ்கோடி இடையேயான 18கி.மீ தூரத்தை இவர் 11மணி நேரத்தில் நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார். (ஓ)

# திருமண விருந்துகள் தொடர்பாக காஷ்மீரில் அதிரடிக் கட்டுப்பாடு!

ஸ்ரீநகர் மே27

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் திருமண விருந்து நிகழ்ச்சிகளுக்கு அதிரடிக் கட்டுப்பாடுகளை அந்த மாநில அரசு விதித்துள்ளது.

அதன்படி, பெண் வீட்டார் 75 பேரைத்தான் திருமண விருந்துக்கு அழைக்கலாம். அதேபோல மாப்பிள்ளை வீட்டார் 50 பேரைத்தான் விருந்துக்கு அழைக்கலாம்.

ஒரு வீட்டில் ஒரு பெண்ணுக்குத் திருமணம் நடக்கிறதென்றால், திருமணத்துக்கு 25 கிலோ அரிசி மற்றும் மாமிசம் தான் சமைக்கவேண்டும. ஒரே நேரத்தில் இரு மகள்களுக்குத் திருமணம் நடத்துகிறார்களென்றால் திருமண விருந்துக்கு 60கிலோ அரிசி மற்றும் மாமிசம் சமைக்கலாம். கூட்டு* பொரியல் உள்ளிட்ட பதார்த்தங்கள் ஐந்துக்கு மேல் போகக்கூடாது. சோறும் கறியும் இதில் அடங்கும்.

இக்கட்டுப்பாடுகளை மீறினால் அக்குற்றத்துக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கமுடியும் என்றும் அரசு அந்த உத்தரவில் தெரிவித்துள்ளது.

திருமண விருந்து நிகழ்ச்சிகளில் பெருமளவில் உணவுப்பொருள்கள் வீணாக்கப்படுகின்றன அதனால், உணவுப்பொருள் பற்றாக்குறை அதிகரிக்கிறது. அதனால், விலையுங் கூடுகிறது. எனவே, திருமண விருந்து வைபவங்களை அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வந்து மாநில அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

## சுவிங்கம் விற்க சிங்கப்பூரில் தடை

சிங்கப்பூர் நாட்டில் சுகாதார முறைகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. வீதிகளில் புகைபிடிப்பது, குப்பை போடுவது, எச்சில் துப்புவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படுகின்றது; அபராதமும் விதிக்கப்படுகிறது. இதேபோல் சுவிங்கம் விற்பனைக்கும் சிங்கப்பூரில் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

கடந்த 1992ஆம் ஆண்டு சுவிங்கம் விற்பனை தடை செய்யப்பட்டது. ஆனால், மருத்துவ வசதிக்காக மெடிக்கல் கடைகளில் மருந்துடன் கூடிய சுவிங்கம் விற்க அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. தற்போது இதற்கும் அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. இதை மீறுபவர்களுக்கு 2 ஆண்டு சிறை மற்றும் 5ஆயிரம் சிங்கப்பூர் டொலர் அபராதமும் விதிக்கப்படும்

# பிறக்கவிருந்த குழந்தையை விலை பேசிய பெண்ணுக்குச் சிறை

லண்டன்,மே27

பிரிட்டனின் வடக்குப் பகுதியைச சேர்ந்தவர் மவுரியா கிரீன்ஸ்லேடு (வயது33). இந்தப் பெண் கருவுற்று இருந்தார். தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையை விற்க அவர் முடிவு செய்தார். இது பற்றி இணையத்தளத்தில் அறிவித்தார்.

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த மார்க்-மைக்கல் ஜோன்சன் தம்பதி மவுரியாவுடன் தொடர்பு கொண்டனா.

தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையை 8 லட்சம் ரூபாவுக்கு விலைபேசினார் மவுரியா, இதை ஏற்றுக்கொண்ட அந்த தம்பதியிடம் இருந்து ஒரு லட்சத்து 56 ஆயிரம் ரூபாவை அவர் முற்பணமாகப் பெற்றுக்கொண்டார்.

இதேபோல் நார்த் வேல்சில் உள்ள ஹூட்சன் நகரைச் சேர்ந்த பீட்டர்-ராபின்சன் ஹட்சன் தம்பதியிடமும் குழந்தையை விலைபேசி ஒரு லட்சம் ரூபாவை முற்பணமாகப் பெற்றுக் கொண்டார் மவுரியா.

மவுரியா கிரீன்ஸ்லேடுக்கு பெண் குழந்தை பிறப்பதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு அந்தக் குழந்தையை விற்பதற்காக செய்திருந்த 2 ஒப்பந்தங்களையும் அவர் ரத்துச் செய்தார். இதனால் ஆத்திரம் அடைந்த பீட்டர்-ராபின்சன் ஹட்சன் தம்பதி பொலஸில் முறையிட்டனர்.

பொலீஸ் மவுரியா கிரீன்ஸ்லேடை கைதுசெய்து வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி ரிச்சர்டு ஹென்கிக்ஸ், குழந்தை பிறப்பதற்கு முன்பே குழந்தையை விற்க விலை பேசி முற்பணம் வாங்கிப் பின்னர் ஏமாற்றிய குற்றத்துக்காக அந்தப் பெண்ணுக்கு 2 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினார்.

வடமராட்சி கடற்கரையில்

# கால்வாய் வெட்டியதற்கான நிதியை வழங்கக் கோரிக்கை

வடமராட்சி,மே27

வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் படகுகளை கரையில் இழுத்துவிட வசதியாக வான்(கால்வாய்) தோண்டப்பட்டதற்கான நிதியை தாமதமின்றி வழங்குமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் பிராந்திய கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக 'நிகொட்' நிறுவனத்தைக் கேட்டுள்ளது.

தொண்டைமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையான கடற்பகுதியில் மீனவர்கள் படகுகளை கடலுக்குள் எடுத்துச்செல்லவும், கரைக்கு எடுத்துவருவதற்கும் வசதியாக 10 வான் தோண்ட நிதி உதவிகளை வழங்க 'நிகொட்' நிறுவனம் கடந்த வருடம் மே மாதம் முன் வந்தது.

வான் தோண்டுவதற்கு படையினா ஆரம்பத்தில் கெடுபிடிகளை விதித்து பின்னர் அதற்கான அனுமதியினை வழங்கினா.

இதனைத் தொடர்ந்து மீனவர்கள் வான் வெட்டும் வேலைகளை ஆரம்பித்து ஒரு பகுதி வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளனர். இந்த நிலையில் தொடர்ந்து வான் தோண்டும் வேலைகளை மேற்கொள்ள, இவ்வேலைகளுக்கான கொடுப்பனவில் ஒரு கட்டநிதியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-173)

## ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க கால அவகாசம்

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்களில். 14பேர் தொடர்பாக யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள்மீது இராணுத்தினரின் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று முன்தினம் யாழ் மேல் நீதிமன்றில் நீதிபதி கே.பி. எஸ். வரதராசா முன்னிலையில் இடம் பெற்றன.

அப்போது பிரதிவாதிகளான இராணுவத்தரப்பு அதிகாரிகள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் தரப்பில் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் கோரப்பட்டது.

இதனை அடுத்து ஆட்சேபனைகளை அடுத்த மாதம் 28ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டதுடன் வழக்கு விசாரணைகளை அதே தினத்திற்கு ஒத்தி வைத்தார். (ஓ-5)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மே27

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் "இறைவனின் அருவுருவம்" என்னும் பொருளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையா சொற்பொழிவாற்றவுள்ளார். (10)

## கொடியேற்றம்

இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம். நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 நாள்கள நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 12ஆம் திகதி காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

ஆலயத்தின் பஞ்சமுகப் பிள்ளையார் சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம் பெறும். (10)


# WITHDRAWAL OF POWER OF ATTORNEY

I, Mrs. Sarojini Kulasingham living at 290, Kandy Rd, Ariyalai, Jaffna do hereby notify that I am withdrawing the Power of Attorney No 3040/30.9.2002, given to Mrs.Devaki Thanarajah of 55,Nedunkulam Road, Ariyalai, Jaffna on 6th Nov. 2002, attested by my Late Lawyer Mr.R.Jeyasingam of No.38, St.Annes Rd, Jaffna.

S.Kulasingham.

(32357)(42)


## நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

4 ஆம் ஆண்டு — 6 ஆம் ஆண்டு



அமரர் சுப்பிரமணியம் அம்பலவாணர் (சட்டத்தரணி)



திருமதி அம்பலவாணர் புவனேஸ்வரி

12.05.1918 ⟸ தோற்றம் ⟹ 18.08.1926
17.01.2000 ⟸ மறைவு ⟹ 02.05.1998

மனிதரில் மாணிக்கங்களாய் மாநிலத்தில் வாழ்ந்தீர்
புனித வாழ்வு வாழ்ந்து புண்ணியர் கழல் சேர்ந்தீர்
இனிய உமது முகங்களை எம்மால் மறக்கவே முடியாது
என்றும் நினைந்து நாம் அஞ்சலி செலுத்தி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி!

புத்தூர் கிழக்கு, புத்தூர். (32363)(37-17-19) திருமதி வி.சுலோஜனாதேவி (அன்பு மகள்).

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆறுமுகம் கனகம்மா

(இளைப்பாறிய ஆசிரியர் - மீசாலை கமலாம்பிகை வித்தியாசாலை)



சாவகச்சேரி, தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் கனகம்மா 25.05.2004 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சமாதான நீதிவான் அருணாசலம் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் பிரபல ஆயுர்வேத வைத்தியர் காலஞ்சென்ற பரமு வீரசிங்கத்தின் அன்புமகளும் ஜெயபாலன் (சமாதான நீதிவான், வீதி அபிவிருத்தி அதிகார சபை - வீதி அபிவிருத்தித் திணைக்களம், ஒப்பந்தக்காரரும் - கெயாஸ் கல்லுடைக்கும் ஆலை உரிமையாளர், கப்பூதூ கரவெட்டி), ஜெயக்குமாரன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாலு சந்தி, கரவெட்டி), ஜெயராணி, ஜெயதேவன் (ஜேர்மனி), ஜெயமணி (கனடா), ஜெயலட்சுமி (ஜேர்மனி), ஜெயகாந்தன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மீனலோஜினி, தவமலர் (அதிபர், கப்பூதூ ஏகாம்பர வித்தியாலயம்), பரமநாதன் (இலங்கைவங்கி, சாவகச்சேரி), சிவசிறி (ஜேர்மனி), இந்திரகுமாரன் (கனடா), பத்மநாதன் (ஜேர்மனி), வாசுகி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுஜன், நிலுஜா, நிரோஜன், கீதா, நிசாந்தன், நிரஞ்சன், விஜிதா, சோபிகா, வைஸ்னா, செந்தூரன், வாகீசன், மதுரா, ஜீவி, பவித், சானகா, சங்கீத், சஷ்மிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2004) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப.4.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரசாலை வடக்கு, கொம்பிகுளம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"திருவேரகம்", சரசாலை வடக்கு, சாவகச்சேரி.* (32364)(37-)

தகவல்: ஆ.ஜெயபாலன் (மகன்).

## திருமதி பொன்னையா நாகரத்தினம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா நாகரத்தினம் அவர்கள் (25.05.2004) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சி ஆகியோரின் அருமை மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்லாச்சி பொன்னையா, சுப்பிரமணியம், தங்கச்சிமுத்து ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (முன்னாள் உரிமையாளர் ஸ்ரீவரதாஸ்), இராசேஸ்வரி, காலஞ்சென்ற கனகலிங்கம் (அரச நில அளவையாளர்), வள்ளிநாயகி, பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (27.05.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"தாயகம்" இளந்தாரி கோயிலடி, இணுவில் கிழக்கு, இணுவில்,*
பத்மநாதன் (மகன்) 00919894126019 - இந்தியா
கிருபாகரன் (பேரன்) 0777-498451

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(32366)(37)


# STUDY IN INDIA

**Engineering, Medicine & Pharamedical**
ADMISSIONS 2004 - 05
VINAYAKA MISSIONS' GROUP OF COLLEGES
www.vinayakamissions.com

Vinayaka Missions' is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

A.V. INSTITUTE OF TECHNOLOGY (A.V. I. T)
(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University)
Paiyanoor, Chennai, TAMIL NADU

B.Eng - 4 Years
* Electronics & Communication Engineering (ECE)
* Electrical & Electronics Engineering (EEE)
* Computer Science & Engineering (CSE)
* Mechanical Engineering (Mech)

Req. Pass in Maths, Physics & Chemistry at GCE A'Level.

V.M College of Pharmacy, Salem, TAMIL NADU
(Affiliated to Tamilnadu Dr.MGR Medical University)

B.Pharm - Bachelor of Pharmacy - 4 Years
Req. Pass in Biology, Physics & Chemistry at GCE A'Level.

Other under graduate courses available in
* Homeopathy & Surgery (BHMS)
* Physiotherapy (BPT)
* Optometry (B.Opto)
* B.Sc Nursing

*Contact for more details:-*
NN EDUCONSULT
181/1W.A.Silva Mawatha, Colombo-06.
Tel: 011 - 555 88 33 Fax: 011 - 555 88 44
E-mail: nnconsult@sltnet.lk


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 580 |
| திகதி | 25-05-2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல. 4699349- 4712613

வெற்றி இலக்கங்கள்: **01 18 37 53**

லக்கினம் துலாம்

ஜக்பொட் பரிசு ரூபா.35,41,150/- வெல்லப்படவில்லை. இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா. 41,97,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,93,714 | 10/- | 29,37,140/- |
| 2.இலக்கங்கள் | 26,893 | 20/- | 5,37,860/- |
| 1.இல + லக்கினம் | 26,666 | 30/- | 7,99,980/- |
| 2.இல + லக்கினம் | 2,503 | 100/- | 2,50,300/- |
| 3.இலக்கங்கள் | 734 | 500/- | 3,67,000/- |
| 3.இல + லக்கினம் | 59 | 5,000/- | 2,95,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 35,41,150/- | - |
| மொத்தம் | 3,50,572 | - | 54,87,280/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 54,87,280

தொடர் இல. 5682795 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 மே 28ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4701671-1-04
4709642-9-39
4702971-6-93
4706450-2-25
4706001-4-11


நாகம்ஸ் சுன்னாகம்



மாதுவன், சதா, விவேக் நடித்த
தினசரி: காட்சிகள் 11.00, 3.00, 7.00
(சி-34180)(32)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரபுதேவா, ஆஷியா, தாமு, ரகுவரன நடித்த
அலாவுதீன்
(சி34420)(12) காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

லக்ஷ்மி இணுவில்
3 ஆவது வெற்றிவாரம்... இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா (2 வேடங்கள்), ஜோதிகா நடித்த மிகப் பிரமாண்டமான நார்ப்பில (ரீலஸ்)
பேரழகன்



தினசரி :11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(32335)(12)

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
சூர்யா, ஈஷா, மாதவன், மீரா ஜஸ்மின், சித்தார்த், த்ரிஷா மற்றும் பலர் நடித்த



ஆய்த எழுத்து
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(C/34517) (22)

யாழ்.சமூக செயற்பாட்டு மையம், கொழும்பு கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து திருமதி லலித்தா கே.அளவத்தையினால் பெண்களுக்கான

## அழகியல் கலைப் பயிற்சியும் நிறைவுநாள் நிகழ்வும் மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

**இடம்: யாழ்.மத்திய கல்லூரி**

**காலம்: 30.05.2004 - 01.06.2004 வரை**

**நேரம்: 10.00 மணி தொடக்கம் 5 மணி வரை**

அழகுக்கலையில் ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

இந்தக் கண்காட்சியின் மூலம்

★ அழகியல் கைவினை வேலைப்பாடுகளுடன் கூடிய சாறிவகைகள், பஞ்சாபிகள்.

★ துணிகளினாலான பொம்மைகள்.

★ முத்து ஆபரணங்கள்

பூச்செண்டுகள், மணவறை அலங்காரம், Settee back, மேசை அலங்காரம், Table arrengement என்பனவற்றைப் பார்வையிடவும் கொள்வனவு செய்யவும முடியும்.

இவற்றுடன் ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் பல்லின மத ரீதியிலான மணப் பெண் அலங்காரங்கள் (Fashion Show) இந்து, கிறீஸ்தவ, முஸ்லிம், கண்டிய மணப்பெண் அலங்காரக் காட்சிகளும் இடம்பெறும்.

யாவரும் வந்து பயன் பெறுவீர்கள்.

*விளம்பர அனுசரணை:*
Aseervatham stores,
61,Grand Bazaar,
Hospital Road,
Jaffna.

- நிர்வாகத்தினர் -
Aseer Vaniga Nilaiyam
202A, K.K.S. Road,
(சி-35244)(11-12-36) Jaffna.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 16 – 04 – 1922



மறைவு 27 – 04 – 2004

### திருமதி வேலுப்பிள்ளை கௌரியம்மா

அன்புடன் பண்பையும் கலந்திழைத்து அறமுணர்த்தி
தென்புடன் எமைவளர்த்துக்களித்த அம்மா
இன்புடன் நாம் வாழத்துணையாயிருந்து
என்புருகப்பாசமதை ஊட்டி வளர்த்த அம்மாவே!
எமைத்துன்புறத் துடிக்கவிட்டுச் சென்றதேனோ?
உன்நினைவு எக்காலும் எமைவிட்டகலாதம்மா.

*16/2,லோட்டஸ் றோட்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (32377)(36-11-12)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நமஹ

## 19 ஆம் நாள் நினைவலையும் சபிண்டீகரண அழைப்பும்



### அமரர் கனகலிங்கம் தியாகராசா (மெக்கானிக்)

திதி: சஷ்டி

கணவனாய், கண்கண்ட தெய்வமாய்
கண்ணிறைந்த வாழ்வு தந்தாய்!
மனிதருள் மணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து மறைந்த புண்ணிய சீலரே!
வாழ்க்கையில் எம்மை வழிநடத்திய தெய்வமே!
அன்பாய்ப்பேசி ஆதரவாய் அரவணைத்து உலகில்
பண்போடு எமை வாழவைத்த ஆருயிர் அப்பாவே!
நாள்கள் மாதங்களாகி மாதங்கள் ஆண்டுகளானாலும்
ஆறுமோ எம் நெஞ்சம்?

எங்கள் அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (27.05.2004) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இன்றைய தினம் நிகழ்கின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மிஷன் பாடசாலை வீதி,*
*கோண்டாவில்.* (32374)(36-11-12)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### தீ மிதிப்பு உற்சவம்

யாழ்ப்பாணம், மே27

யாழ். புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும், தீ மிதிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை பகல் விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

இதனையொட்டி பகல் அன்னதான நிகழ்வும் இரவு விசேட பஜனை, ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினர் வழங்கும் வில்லிசை நிகழ்வு என்பன நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. (எ)

### சீருடைத்துணி விநியோகம்

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இவ்வருடத்திற்கான இலவச சீருடைகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றன. சீருடைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் பெற்றோர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு தமக்குரிய சீருடைகளைப் பெறமுடியும் என்று வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா தெரிவித்தார். (ஒ-135)

### தையல் இயந்திரம் கையளிப்பு

யாழ் பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தினால் சுழிபுரம், காட்டுப்புலம் கிராமத்துக்கு தையல் இயந்திரம் ஒன்று கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சமூகவியல் துறைத் தலைவர் பேராசியர் என்.சண்முகலிங்கன தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் துணைவேந்தர் சு.மோகனதாஸ் மற்றும் பீடாதிபதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

காட்டுப்புலம் இ.மி.த.க.பாடசாலை அதிபர் எஸ்தனபாலசிங்ம் தையல் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வார. (10)

### கருத்தரங்குகள்

சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றினை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல 3 மணிக்கு சித்தன்கேணியில் அமைந்துள்ள வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளன அலுவலகத்தில் இந்தக் கருத்தரங்கு சம்மேளனத் தலைவர் இ.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (எ-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த உப அதிபர்களுக்கான தொடருறு கல்விக் கருததரங்கு வரிசையில் விழுமியக் கல்வி தொடர்பான கருத்தரங்கொன்று நாளை வெள்ளிக்கிழமையும், மறுநாள் சனிக்கிழமையும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கும் ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 1ஏ,பி 1 சி மற்றும் தரம் II பாடசாலைகளைச் சேர்ந்த உபஅதிபர்களை அவர்களுக்குரிய திகதி களில் கருத்தரங்கிற்குச் சமுகமளிக்குமாறும-

காலை 8.30 மணிமுதல் கருத்தரங்கு ஆரம்பமாகி நடைபெறும் என்றும் - இதற்குப் பொறுப்பான உதவிக் கல்விப பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந் திரராசா அறிவித்துள்ளார். (எ-152)

### எரிகாயங்களுக்கு உள்ளான வயோதிபர் மரணம்!

எரிகாயங்களுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை மந்திகை ஆரசினர் வைத்திய சாலையில இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் ஒருவர் அங்கு மரணமானார்.

பருத்தித்துறை சாரையடியைச் சேர்ந்த கனகசபை சண்முகலிங்கம் (வயது - 67) என்பவரே மரணமானவராவா.

இறந்தவர் பாரிசவாத நோயினால பாதிக்கப்பட்டவர் எனவும் கடந்த 23 ஆம் திகதி மாலை அவர் வீட்டின் முன்னால இருந்த வாழைச் சருகுகளை கூட்டித் தீயிட்ட சமயம் அவர் அதில் தவறி வீழ்ந்து எழும்ப முடியாத நிலையில் எரிந்து படுகாயமடைந்ததாகவும்-

அவ்வேளை அருகில் இருந்த ஆலயத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய தான் உடனடியாக அவரை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் இறந்தவரின் மனைவி தெரிவித்தார். மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் இரு நாள்களின் பின்னர் கடந்த 25ஆம் திகதி அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு மரணமானார்.

மரணவிசாரணையின் பின்னர் சடலம் மனைவியிடம் கையளிக்கப்பட்டது. (எ-8-15)

## கண்ணீர் அஞ்சலி

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர், நலன்புரிச் சங்க உறுப்பினர் **திரு.மா.தர்மலிங்கம்** (கிளை முகாமையாளர்) அவர்களின் பாசமிகு தகப்பனார்

**சின்னவன் மாணிக்கம்** காலமானார்

அவர்களை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அங்கத்தவர்கள், நிர்வாகிகள்,
பணியாளர் நலன்புரிச் சங்கம்.

(C/35246)(36-11-12)

## கண்ணீர் அஞ்சலி

கிழக்குப் பல்கலைக் கழக பொருளியல்துறைத் தலைவர் **குமாரவேல் தம்பையா** அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் மற்றும் கல்வி, பொது சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

இளம்பொருளியலாளர் மன்றம்,
பொருளியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(32376)(36-11-12)

## மரண அறிவித்தல்கள்

### மாசானம்பிள்ளை இராமகிருஷ்ணன் (மோகன்)



கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 82, மணிக்கூட்டு வீதியை வதிவிடமாகவும் கொண்ட மாசானம்பிள்ளை இராமகிருஷ்ணன் (மோகன்) 26.05.2004 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாசானம்பிள்ளை - முத்தாச்சியின் அன்பு மகனும் இராமலிங்கம் ஆயிரத்தம்மா (சரஸ்), இராமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னையா - நாகம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கதிர்காமன் மற்றும் சங்கரன் வடிவலகி ஆகியோரின் அன்பு மைத்துனனும் சுந்தரலிங்கம், கோகிலாம்பாள், சி.மகேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிறிகாந்தலிங்கம், பவளராணி (இத்தாலி, அன்ரன் (ராஜன்), ஜானகி, கணேஸ் ஆகியோரின் அன்புத தந்தையும் காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் செல்வராசா (பிரான்ஸ்), கந்தசாமி, உதயகுமார் (வசந்தன்), பத்மாசனி, நவமணி, குணரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் துஸ்யந்தன், துஸ்யந்தி, ஜெயந்தன், சுவர்ணன், சதீஸ்குமார் (மாலாயன்கபே முகாமையாளர்), சன்சுதா, சங்கீதா, சரண்ராஜ், சியாமிளா, சதுர்சன், சந்துஜா, சஜந்தினி, சஞ்சீவன், சரணியா, சர்மிளா, சர்மினி, சாருஜன் (இத்தாலி) ஆகியோரின் பேரனாரும் ச.கபினாஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.05.2004) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் புதிய நேரம் 3.00 மணியளவில் கோமபையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்கிறோம்.

*7/3, சிராம்பியடி,*
*யாழ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

ரொலிபோன்:
021-222 -7598
021-222-2373
0777-917753

தகவல்:
N.சதீஸ்குமார்,
(பேரன்-மலாயன் கபே முகாமையாளர்),

(32372)(38-11-12-36)

### யாதவராயர் பத்மநாதன்

(இலங்கை ரயர் கூட்டுத்தாபனம் - களனி முன்னாள் அதிகாரி, பிரபல சோதிடர்)

8 ஆம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் இல.95 புதுச்செட்டித் தெரு, கொட்டாஞ்சேனையில் வசித்து வந்தவரும் தற்சமயம் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட யாதவராயர் பத்மநாதன் 25.05.2004 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யாதவராயர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)- இலக்குமி அம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் (மு.க. கொழும்பு), பராசக்தி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வடிவழகியின் அன்புக் கணவரும், சிவப்பிரியயோகானந், காயத்திரியின் அன்புத் தந்தையும், கமலாட்சி (பிரதேச செயலகம் - தெல்லிப பழை), இராமநாதன் (முன்னாள் க/குப் பதிவாளர் - அரச கடற்படை), பால கிருஷணன் (பொறியியலாளர் - பிரான்ஸ்), இரகுநாதன் (கனடா), சாரதா தேவி (தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை , நீர் கொழும்பு), கலாதேவி (பொறியியலாளர் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிருஷ்ணேஸ்வரன் (முன்னாள் எழுதுவினைஞர் - கொழும்பு), விருத்தாம்பிகை (யாழ்ப்பாணம்), திரியம்பகி (பிரான்ஸ்), ரதிதேவி (கனடா), நடராஜ லிங்கம் (பிரதம பொறியியலாளர் - யூனியன் காபைற்), கலாநிதி ஈஸ்வர காந்தன் (பிரான்ஸ்), கருணாகரன் (கொழும்பு), சண்முகநாதன் (கனடா), சர்வானந்தசிவம் (கனடா), விநாயகமூர்த்தி (கனடா), காலஞ்சென்றவர்களான திலகவதி, சத்தியவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராதிகா (ஆசிரியர் - ஸ்ரீ சித்தி விநாயகர் மகாவித்தியாலயம், இறுப்பிட்டி), விஜிதா (யாழ்.பல்கலைக்கழகம்), நிஷாந்தி (யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனம்), ஸ்ரீ கிருஷ்ணன் (மாணவன்), பார்த்தசாரதன் (மாணவன்), ஆனந் (பிரான்ஸ்), அரவிந் (பிரான்ஸ்), அனுஷியா (பிரான்ஸ்), ராகுலன் (கனடா), சுமதி (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையாரும் Dr.முகுநதன கொழும்பு), யசோதா (மருத்துவபீடம் மாணவி, ரஷ்யா), பாலமுரளி (கொழும்பு றோயல் கல்லூரி)), வாணி (கொழும்பு - சைவ மங்கையர் கழகம்), தர்சினி (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்), தர்மினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.05.2004 சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

*4,RUE GASTON DARBOUX,*
*75018 PARIS,*
*FRANCE.*
*T.P.NO:-0142057151*

(32171)(38-11-12-36)

தகவல்:
யா.இராமநாதன்
(சகோதரன்),
இல.40/2, கோவில் வீதி,
சுண்டுக்குளி.

# கிழக்கு நிலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இதுபோன்ற கொலைகள தொடர்ந்து நடைபெறுவதும், இராணுவத்தாலோ, சட்டம் ஒழுங்கை பேணும் இலங்கை அரசின் கட்டமைப்புக்களாலோ இவற்றைக்கட்டுப்படுத்த முடியாதிருப்பதும் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று நோர்வேதரப்புக்குத் தெளிவாகக் கூறியுள்ளோம். இதை அரசுக்கு தெரியப்படுத்தும்படியும் கோரினோம்.

*கேள்வி:* மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் 15 பேர் கொண்ட அதிரடிப்படைப் பிரிவு ஊடுருவியுள்ளது என்று கூறப்படுகின்றது. இந்தத் தகவல் உண்மையா? கண்காணிப்புக் குழுவுக்கு இது குறித்து முறையிட்டுள்ளீர்களா?

*பதில்:* இவைபோன்ற யுத்த நிறுத்த மீறல் சம்பவமாகக் கண்காணிப்புக் குழுவிடம்தான் முறையிடுவது வழக்கம். அவர்களோடு எமது பிராந்தியமட்டப் பொறுப்பாளர்கள் தொடர்புகொண்டு தமது ஆட்சேபனைகளையும், நிலைப்பாடுகளையும் தெரியப்படுத்தியுள்ளனர்.

நாங்கள் பொதுவாக யுத்த நிறுதத மீறல்களைக் கட்டுப்படுத்த வேண்டும என்று நோர்வேத்தரப்பிடம் கேட்டுள்ளோம்.

*கேள்வி:* விடர் ஹெலக்ஸன் பேச்சு ஆரம்பிக்கும் திகதி, இடம் தொடர்பாக ஓரிரு தினங்களில் அறிவிப்பதாகக் கூறியிருந்தார் ஆனால், எரிக் சொல்ஹெய்ம் பேச்சுக்கான நிகழ்ச்சிநிரல் பற்றி பேசினோம் என்கிறார். இது குழபபமாக இல்லையா?

*பதில்:* எம்மைப்பொறுத்த மட்டில் ஆரம்பத்தில் அந்த நவடிக்கை இருந்தது. ஜனாதிபதி எமது நிலைப்பாடுகளைத் தெளிவாக விளங்கிக் கொண்டு பேச்சுக்கான சூழலை மிக விரைவாக உருவாக்கிக் கொள்வார் என்ற நம்பிக்கை எமக்கும் இருந்தது. அந்த அடிப்படையில் அந்தக்கருத்தை ஹெலக்ஸனும் நாங்களும் ஒன்றாகக் கூறியிருந்தோம்.

ஆனால், இன்னமும் இந்த விடயத்தில் ஜனாதிபதி தமது நிலைப்பாட்டை தெளிவாக்கிக் கொள்ளாததால், காலம் இழுபட்டுக்கொண்டு போகிறது. பேச்சைத் தொடங்குவதற்கான காலம், முடிவு, நேரம் எல்லாம் ஜனாதிபதியின் கைகளில் அவரது செயற்பாட்டில் தான் இருக்கின்றன.

*கேள்வி:* ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அறிந்த பின்பு தான் நிகழ்ச்சி நிரல் வெளியிடப்படுமா?

*பதில்:* எம்மைப்பொறுத்த மட்டில் நிகழ்ச்சி நிரல் ஒன்றைக் கொடுத்துள்ளோம். கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேற்பட்ட பட்டறிவு, அனுபவம் காரணமாக பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படுவதில் எமது தலைமை உறுதியாகத் தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.

தெளிவான நடைமுறைகள், ஒழுங்கமைப்புக்கள், தெளிவுபடுத்தல்களோடு பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

*கேள்வி:* பேச்சுக்கான குழுவில் விடுதலைப் புலிகள் தரப்பில் யார், யார் இடம்பெறுவர்?

*பதில்:* எமது தரப்பில் மாற்றங்கள இருக்காது. ஏற்கனவே பங்கு பற்றியவர்களே தொடர்வர். புதியவர்களும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

அரசு பிரதிநிதிகள் தொடர்பில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அதிகாரமுள்ள அமைச்சர்கள் மட்டத்திலான - தீர்மானங்களை எடுக்கக் கூடிய - அதிகாரம் உள்ள தூதுக்குழு பங்குபற்ற வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு.

### ஜே.வி.பியின் கருத்து

*கேள்வி:* இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைபற்றி பேசக்கூடாது என ஜே.வி.பி. கூறுகின்றது. அது குறித்து....?

*பதில்:* பேச்சுக்கு ஓர் இணக்கப்பாடான நிலையும் நடைமுறைச்சாத்தியமான சூழலும் உருவாக்கப்படவேணடும். பாதிக்கப்பட்ட எமது மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட யோசனையைப் புறந்தள்ளுவது, பேச்சுக்கான சூழலை நிச்சயமாக சீர்குலைக்கும் என்றே கருதுகின்றேன்.

சமாதானத்தின் தேவையை ஜே.வி.பி. போன்றவர்கள் உணர்ந்து கொள்வார்களேயானால், யதார்த்தத்தைப்புரிந்து கொண்டு, பாதிக்கப்பட்ட - உண்மையான தீர்வை வேண்டி நிற்கும் - மக்களின் நிலைப்பாட்டுக்கு செவிசாய்க்க வேண்டும் இதுவே அவசியமானது. இதுவே யதார்த்தமும் கூட.

இந்த யதார்த்தத்தைப் புறந்தள்ளி விட்டுப் பேச்சை முன்னெடுக்க வேண்டுமாயின் அது சாத்தியம் இல்லை. (ஐ-3)

## இருதரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைத் தெரிவிப்போம்.

இரு தரப்பினரும் நிகழ்ச்சிநிரல் தொடர்பாக இணக்கம் காணவேண்டும். இதற்காக இரு தரப்பினருடனும் மாறி மாறி பேச்சுக்களை நடத்தவுள்ளோம்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கண்டியில் தங்கியிருந்ததால் அவரைச் சந்திக்க முடியவில்லை. கொழும்பு திரும்பியதும் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடுவேன் - என்றார் சொலஹெய்ம். (ஐ-3)

வணிகக்கல்வி 2006
C.C.A
சுன்னாகம்
சனி, ஞாயிறு 6.45 a.m.
V.முரளி
B.B.A. (Fm Spl.)
(32365)

பத்திரிகை மடிப்பாளர்கள் உடன் தேவை

பத்திரிகை மடிப்பவர்கள் உடன் தேவை.

பத்திரிகை மடிப்பதில் முன் அனுபவமுள்ளவர்களுக்கும் யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இன்று (27.05.2004) பி.ப. 3.00 மணிக்கு நேரில் வரவும்.

உதயன் மனிதவள சேவை

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-35339)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சோமசேகரம் (சதன்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசேகரம் (சதன்) அவர்கள் நேற்று (26.05.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமிர்தாம்பிகையின் அன்புக் கணவரும் லஷ்சனாவின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

*சரவணை.* (32379)(40-12-38) தகவல்: மனைவி.

## 'ஈழத்துச்சதன்' காலமானார்!

யாழ்ப்பாணம்,மே27

'ஈழத்துச்சதன்' என அழைக்கப்பட்ட பல்குரல் விற்பன்னர் ஆறுமுகம் சோமசேகரம், நேற்று சரவணையில் காலமானார். இவர் வேலணையைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

ஈழத்தில் பல பாகங்களிலும் இவர் பல்குரல் விநோத நிகழ்ச்சிகளை (MIMICRY) நிகழ்த்திப் புகழ்பெற்றவர். இவரது இறுதிக்கிரியைகள் இன்று சரவணையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றன.

(எ-9)

## பிரதிப் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் டிசுபிள்யு, (டியூ) குணசேகரா அரசமைப்பு சீர்திருத்த அமைச்சராகவும் -

பேராசிரியர் விஷவ வர்ணபால வெளிவிவகாரப் பிரதி அமைச்சராகவும் பதவியேற்றனர்.

(எ-க)

## மூன்று அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றில் குழப்பம் ஏற்படுத்துவதற்கு என்றே அங்கு வந்துள்ளனர்போல் தோன்றுகிறது. எதிர்க்கட்சியினர் எதைப் பேசினாலும் அதை சத்தம்போட்டு, கூச்சலிட்டு குழப்பும் நடவடிக்கைகளிலேயே அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 18ஆம், 19ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் கூடியபோது இது தெட்டத்தெளிவாகத் தெரிந்தது. என்றுமே இல்லாதவாறு எதிர்க்கட்சியிலிருந்து சபாநாயகர் ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. சபாநாயகரை அவரது பணிகளை நிறைவேற்ற விடாமல் நாடாளுமன்ற சபா மண்டபத்தின் மத்தியில் வந்த ஆளும் கட்சியின் சிலர், ஆர்ப்பாட்டம் செய்து, சபாநாயகரை அநாகரிகமான முறையில் தூசித்தனர். இது நாடாளுமன்ற கௌரவத்தையும் அதன் ஜனநாயகத்தையும் கேலி செய்யும் ஒரு செயலாகவே நாம் கருதுகிறோம்.

எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் நாம் சபையில் கூச்சலிட்டு குழப்பம் விளைவிக்க விரும்பவில்லை. இப்படியே இந்தநிலை தொடர்ந்தால் நாமும் கூச்சலிட்டு ஆளுங்கட்சியினர் செய்வதைவிட இரண்டு மடங்காகச் செய்யலாம் ஆனால், இத்தகைய நிலை தொடருமானால் மக்கள் கிளர்ந்தெழுந்து நாடாளுமன்றக் கட்டடத்தை உடைத்து நொறுக்கிச் சின்னாபின்னமாக்கும் காலம வெகுதூரத்தில் இல்லை.

இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்துக்கு ஆப்பு வைக்கும் வகையில திட்டமிட்டு சிலர் செயற்படுகின்றனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது எதிர்காலத்தில் இதுபோன்று செயற்படுவதில்லை என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆனால், கொந்தராத்து முறையில் நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கும் எம்.பிக்கள் சிலர் எப்படி நடந்துகொள்வர் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

ஊடகத்துறை அமைச்சர் உட்பட மூன்று அமைச்சர்களுக்கு எதிராக நாம் விரைவில் நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவோம். இதுபற்றி ஏனைய கட்சிகளுடனும் கலந்தாலோசிப்போம்.

இந்தச் சிறுபான்மை அரசு தொடர்வதை மக்கள் விரும்பினால் நாம் அதை எதிர்க்க மாட்டோம் - என அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
BY: லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 29.05.2004 SAT 4.00 p.m
(SAT, SUN 4.00 p.m)
★அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும். (32304)

தவறிவிட்டது

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக் கோட்டையைச் சேர்ந்த கந்தன் இந்திரன் என்பவருடைய பாஸ்போட், ஹட்டார் நாட்டு I.C,Driving Licence போன்ற பல ஆவணங்கள் அடங்கிய பயணப்பை 31.03.2004 அன்று யாழ். பஸ் நிலையத்திற்கு சமீபமாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (32358)

## லொறி–சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,மே27

சைக்கிளில் வாழைக்குலை கட்டிக் கொண்டு சந்தைக்குச் சென்றதாகக் கூறப்படும் ஒருவர் லொறி மோதியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவம், நேற்றுக்காலை 8.30 மணியளவில் நீர்வேலிச் சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டவர், அங்கு சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

சுமார் 30 வயது மதிக்கத்தக்க இந்த ஆணின் சடலம், இனங்காணும் பொருட்டும் மரணவிசாரணைக்காகவும் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

(எ-7-9-15)

## புலிகளின் விமானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துத் தமிழ்ச்செல்வனிடம் கேட்டபோது அவர் மேலும் கூறியதாவது:-

படைத்தரப்பால் இப்படியான செய்திகள் அவ்வப்போது வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எம்மைப் பொறுத்தவரையில் நீங்கள் நேரடியாகப் பார்க்கும் நிலை வரும்போதுதான் அதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளிடம் விமானப்படை ஒன்று இருப்பது - விமானங்கள இருப்பது - ஏற்கனவே செய்திகளில் வெளிவந்த உண்மை. இந்த உண்மைகளை நாம் மறைக்க விரும்பவில்லை. விமான ஓடுதளம் ஒன்று இருப்பதை தாங்கள் அறிந்துள்ளதாகக் கூறுகின்றனர். இது ஒரு புதிய செய்தியல்ல.

அரசுக்கும், படைத்தரப்புக்கும் தெரிந்த ஒரு விடயத்தை மீள ஒரு செய்தியாக வெளியிடுவதன் அர்த்தம் தான் எமக்குப் புரியவில்லை. கடந்த காலங்களில் வெளிப்படையாக வந்த செய்தி இது. விடுதலைப் புலிகளிடம் விமானம் இருப்பதும் ஓடுதளம் இருப்பதும் ஏற்கனவே அறிந்த உண்மை. நீண்டகாலத்துக்கு முன்கூட்டியே எழுப்பப்பட்ட ஒன்றை அரசு புதிய விடயமாக்குவது ஏன் என்பதுதான் புரியாத விடயமாக இருக்கின்றது. இப்படித் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ஐ-க)

## இடம்பெயர்ந்த சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து தற்போது நிவாரணம் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டவர்களுக்கு இந்த மாதத்திலிருந்து தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு நிவாரணத்தை வழங்குவது என்றும் -

பின்னர் விசேட திட்டம் ஒன்றின் கீழ் இவர்களின் நிலை குறித்து ஆராய்வதென்றும் - கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது.

தெல்லிப்பழை உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள யூனியன் கல்லூரி, புற்றுநோய் ஆஸ்பத்திரி, பல நோ.கூ சங்கம் ஆகியவற்றுக்குச் சுதந்திரமாக மாணவர்கள், ஊழியர்கள், நோயாளர்கள் சென்றுவர வசதியாக காங்கேசந்துறை வீதியில் உள்ள முன்னரங்க நிலைகளை பின்னகர்த்த வேண்டும் என இந்தக் கூட்டததில் கலந்துகொண்டோர் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதியின் பேச்சாளர், தாம் நேரடியாக அந்தப் பகுதிக்கு விஜயஞ்செய்த பின்னர் இதுதொடர்பான முடிவை எடுப்பதாகவும் -

கைதடி, நாவற்குழி வல்லைப் பாலங்களை உடனடியாகப் புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், ஸ்ரீ மகாவிஷ்ணு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மறவன்புலோ மத்தி மக்கள், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் மற்றும் வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் சங்கம் ஆகியவை தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை இந்தக் கூட்டத்தில் வைத்துப் பணிப்பாளர் நாயகத்திடம் கையளித்தன.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பை அடுத்து தென்மராட்சிக்கு விஜயஞ்செய்த அவர், யுத்தத்தினால் சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டார்.

விமானம் மூலம் நேற்றுப் பலாலி வந்தடைந்த ஜனாதிபதியின் பேச்சாளர், யாழ். செயலகத்தில் நடைபெறும் சந்திப்புகளை அடுத்து ஏ-9 வீதியூடாகக் கொழும்பு திரும்பும் அவர், வன்னி சென்று அதிகாரிகளுடன் பேச்சுநடததுவார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், யாழ் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்புக்களை அடுத்து தென்மராட்சி சென்ற அவர், அங்கிருந்து பலாலி சென்று விமானத்தில் கொழும்பு திரும்பினார். (எ-3-5)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி இராசதுரை

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசதுரை 26.05.2004 அன்று இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளியம்மையின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மையின் மருமகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சர்வானந்தன் (பிரான்ஸ்), சிவமணி (பிரான்ஸ்), இந்திராணி (ஆசிரியை,யா/ வைத்தீஸ்வரா கல்லூரி), காலஞ்சென்ற பவானந்தன் மற்றும் ஜீவானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்காந்தினி (பிரான்ஸ்), இராஜகோபால் (பிரான்ஸ்), Dr.உருத்திரன் (யா/ போதனா வைத்தியசாலை) ஆகியோரின அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுதுரை, பாலசிங்கம், நல்லையா மற்றும் தனலட்சுமி பார்வதி, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாரங்கி, சந்தோஸ், துஷ்யந்தி, சங்கவி, பவித்திரன், கஜானி, கேசாஜினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.05.2004 வியாழக்கிழமையன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

*மடம் லேன்,*
*திருநெல்வேலிச் சந்திக்கருகில்,*
*திருநெல்வேலி.* (32380)(38-12)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

### துரைச்சாமி வேலாயுதபிள்ளை

பிரம்படி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி வேலாயுதபிள்ளை அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி தம்பதிகளின் மகனும் அன்னம்மா, பாக்கியம், காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், குமாரசாமி ஆகியோரின் மைத்துனரும், தருமராசா, சிவராசா, நகுலராசா, சண்முகராசா, பவளராணி, ராதாராணி (பிரான்ஸ்), விமலராணி, வசந்தராணி ஆகியோரின் மாமனாரும் குலவீரசிங்கம் (பிரான்ஸ்), ரேணுகா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), தவறஞ்சினி, றமணி, செல்வராசா, சுகந்தி ஆகியோரின் சிறிய தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2004) பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ.சிவராசா, கு.தருமராசா
(மருமகன்மார்).

*பிரம்படி ஒழுங்கை,*
*கொக்குவில்.* (32378)(40)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கணனிக் கற்கைநெறி வழிகாட்டி

# தகவல் தொழில்நுட்பக் கல்வியில் சாதனை படைத்துவரும் IIS



இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறையில் உயர்கல்வியை வழங்கிவரும் முன்னணி வகிக்கும் நிறுவனங்களில் ஒன்றாக IIS நிறுவனம் விளங்கி வருகிறது. 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இலங்கையின் வடபகுதியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டியுள்ளது. உள்நாட்டிலும் சர்வதேசரீதியிலும் தகவல் தொழில்நுட்பத்துறையில் முன்னணி வகிக்கும் பல்வேறு நிறுவனங்களின் அங்கீகாரத்துடன் அறிவுத்துறை சார்ந்ததும், தொழில்துறை சார்ந்ததுமான பட்டங்களை வழங்கிவருகிறது.

இலங்கையின் கணனி மையங்களின் உயர்ந்த தரத்தினைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட கணனிப் பயிற்றுவிப்பு மையங்களின் கூட்டமைப்பின் **(ACTOS – Association of Computer Training Organizations)** அங்கத்துவ நிறுவனம் என்பதும் பிரித்தானியாவின் **Edexcel International** நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கில் செயற்பட்டுவரும் தனியார் கணனிப்பயிற்சி நிறுவனங்களுள் அதிகளவு வளத்தினைக் கொண்டு இயங்கும் முதன்மையான நிறுவனம் என்பது மட்டுமல்லாது கணனித்துறையில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளக்கூடிய தனித்துவம் மிக்க நிறுவனமாகும்.

## தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற **BTEC HND** தகைமையை **IIS** நிறுவனம் வழங்குகிறது.

## கல்வியாண்டு 2004 இற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் : 14.07.2004

**IIS** நிறுவனமானது பிரிட்டனின் Edexcel இனால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பயிற்சி மையமாகும். Edexcel என்பது இலண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும ஜீசீஈ. உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுனர் சபையாகும். இவ்வமைப்பு உலகளாவியரீதியில் தொழில்சார் வல்லுநர்களை உருவாக்குவதற்கென தமது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்கள் ஊடாக (Higher National diploma) பயிற்சி நெறிகளை நடாத்திவருகிறது. BTEC HND (Higher National Diploma) என்பது கணனித்துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சி நெறியாகும்.

**IIS** நிறுவனமானது இலங்கையில் தலைநகருக்கப்பால் இயங்கும் Edexcel இனால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு HND பயிற்சி மையமாகும். இவ்வரிய சந்தர்ப்பத்தை குடாநாட்டு மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதனூடாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கணனித்துறை சார்ந்த உயர்ந்த பதவிகளையுடைய வேலைவாய்ப்புக்களைத் தட்டிக் கொள்வதோடு மட்டுமல்லாது ஓர் சர்வதேச கணனிப்பட்டதாரியாகும் வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

கணனித்துறையில் நீங்கள் பட்டதாரியாவதற்கு

நீங்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? எனில் இவ்வரிய சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். Edexcel International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.Sc (Hons) பட்டப்படிப்பினைத் தொடரமுடியும்.

**IIS** இனால் வழங்கப்படும் HND கற்கைநெறிகள்

1. Higher National Diploma in Computing
2. Higher National Diploma in Software Engineering
3. Higher National Diploma in Business Information Technology.

18 மாத கால மேற்படி HND கற்கை நெறிகளின் முடிவில் பிரிட்டன் Edexcel இன் சர்வதேச Higher National Diploma சான்றிதழ்களைப் பெறுவீர்கள். மேற்படி கற்கை நெறியானது உலயகளாவிய தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் பல்வேறு சர்வதேச நிறுவனங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சி நெறியாகம்.

**IIS** இல் உங்களுக்கான வசதிகள்

1. உள்நாட்டு, வெளிநாட்டுப் பட்டதாரிகளின் விரிவுரைகள்
2. நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய குளிருட்டப்பட்ட ஆய்வுகூடங்களும் விரிவுரை மண்டபங்களும்
3. முற்றிலும் புதிய வெளியீடுகளைக் கொண்ட நூலக வசதி
4. மாணவர்களின் திறமையும் ஆளுமையும் வளர்வதற்கான மாணவர்மன்றம்
5. இலகு தவணை முறையில் கட்டணவசதி
6. இலவச ஆங்கிலமொழிப் பயிற்சி
7. வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்

**IIS** நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவனாகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு **IIS** நிறுவனம் ஒழுங்கினை மேற்கொண்டுவருகின்றது. இதன் மூலம் பொருளாதார ரீதியாக நன்மையடையமுடியும்.

தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்

**IIS** நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களிற்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.



உங்களிற்கு வழிகாட்டுவதற்காகக் காத்திருக்கும் எங்கள் அலுவலகம்



அதி நவீன வசதிகளுடன் கூடிய கணனிகளைக் கொண்ட ஆய்வுகூடம்



ஒவ்வொரு மாணவரின் நலனிலும் காட்டப்படும் தனிப்பட்ட அக்கறை



நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய விரிவுரை மண்டபங்கள்



மாணவர்களின் அறிவுப்பசியைத் தீர்க்கும் புதிய தெரிவுகளைக் கொண்ட நூலக வசதி

## BIT

## Degree of Bachelor of Information Technology
## University of Colombo School of Computing

கொழும்பு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மேற்படி கணனித்துறை பட்டக்கல்வியானது இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் தொழில்சார் வல்லுநர்களை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறியாகும்.

இலங்கையில் இக்கற்கைநெறியினை நடாத்தும் முன்னணி நிறுவனங்களில் **IIS** உம் ஒன்று என்பதோடு வடக்கு கிழக்கில் முதன்மை வாய்ந்த நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கொழும்பு பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

